விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, வைகாசி 18உ (1-6-71) செவ்வாய் ற.ஆகிர் பிறை 7 புத்தகம் 25 இதழ் 28

'வாழும் உடலை வகையாய் வைக்க
நாளும் ஆசனம் நன்றுய்ப் பழகு
பிண்டத் துள்ள பிராண னடக்கி
அண்டத் துள்ள தனைத்தும் வெல்க.'
—ஸ்வாமி ஸத்சிதானந்தா.

யோகக்கலை என்னும் அரிய நூலை விளக்கப்படங்களுடன் 3வது பதிப்பாக வெளியிட்டுள்ளோம். 10 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# 'சிங்களம் மட்டும் சட்டம் அநியாயமானது!'

## —அதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்!

## தமிழ்பிள்ளைகளின் பயிற்சிமொழி தமிழே என்பது சட்டமாகவேண்டும்!

## அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுத் தந்தை இடித்துரை!

"சிங்களம் மட்டும் சட்டம் ஓர் அநியாயச்சட்டம். அதை நாங்கள் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இன்று நீங்கள் சிங்களத்தை ஒரு பாடமாகப் படிக்கும்படி சொல்வீர்கள் பின்னர் சிங்களத்தை போதனு மொழியாக்கினல் தமிழர்களுக்கு என்ன வந்துவிடும் என்று கேட்பீர்கள்! அவ்விதம் சிங்களம் போதனு மொழியாக வந்தால் தேசம் முழுவதும சிங்கள மயமாகிவிடும். தமிழ் அழிந்து போகும். அந்த நிலை ஏற்பட நாம் விரும்பவில்லை. இந் நாட்டிலே தமிழ் மக்களாகிய நாம் தமிழர்களாகவே வாழ விரும்புகிறோம். ஆகவே தான் தமிழ்பிள்ளைகளுக்கு சிங்களம் போதனு மொழியாவதை நாம் எதிர்க்கின்றோம். வடமாகாணம் கிழக்குமாகாணம் ஆகியபகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் சிங்களத்தை அறிந்துகொள்ளத் தேவையில்லை"

—இவ்வாறு அரசியல் நிர்ணய சபையில் 20-5-71ல் தமிழில் உரையாற்றிய தமிழரசுத்தந்தை செல்வா அவர்கள் மிக உறுதியான குரலில் கூறினர்.

*அவரது உரை விபரம் வருமாறு:—*

போதனு மொழியை ஒட்டிய இந்தப் பிரேரணை தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே மிகவும் விசேஷமானதாகும். இன்றிருக்கின்ற நிலையில் இதைவிட முக்கியமான பிரேரணை வேறெதுவும் இல்லையென்று கூறவேண்டும் 'தமிழ் மக்களின் பாஷை விஷயம் முக்கிய கவனத்துக்கு எடுக்கப்படல் வேண்டும். இதைவிட இன்னும்சில பிரேரணைகள் இருக்கின்றன. அவை எல்லாவற்றிலும் நாம் மிகவும் கவனம் செலுத்துகிறோம்.

(2-ம் பக்கம் பார்க்க)



### தமிழ்நாடு சட்டசபையில் 'பீபிள்ஸ் வில்'

ஆங்கிலத்தில் வெளிவரும் இலங்கை வாழ் தமிழினத்தின் உரிமைக் குரலான "பீப்பிள்ஸ் வில்" என்ற ஏடு தமிழ் நாடு சட்டசபையில் வாசித்துக் காட்டப்பட்டது. 'பீபிள்ஸ் வில்' ஏட்டிலிருந்து சில பகுதிகளை வாசித்து காட்டியவர் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியவர்களே.

வங்காள தேசத்தின் தலைவர் ஷேக்முஜிபுர் ரகுமானின் ஆறு அம்சத் திட்டத்தை 'பீப்பிள்ஸ் வில்' அண்மையில் விளக்கமாக வெளியிட்டிருந்ததல்லவா? தமிழக சட்ட மன்றத்தில் வங்காள தேசப்பிரச்சினை பற்றிப் பேசிய முதல்வர் கலைஞர், ரகுமானின் ஆறு அம்சக் கோரிக்கை இவை இவையென்பதை 'பீப்பிள்ஸ் வில்' ஏட்டிலிருந்து வாசித்துக் காட்டிவிளக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

### கோவை மகேசன் கட்டுரைக்கு தடை!

'அண்ணுவின் தமிழ்நாடு கண்டேன்' எனும் தலைப்பில் ஆசிரியர் கோவை மகேசன் இவ்வாரம்முதல் எழுதவிருந்த தமிழகப் பயணம் பற்றிய தொடர் கட்டுரைக்கு பத்திரிகை தணிக்கை அதிகாரிகள் அனுமதியளிக்க மறுத்ததால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி அக்கட்டுரை இவ்விதழில் ஆரம்பிக்கப்படவில்லையென்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

## 'அரசபணி' கடிதங்களில் அனுப்புபவரின் உத்தியோக முத்திரை சிங்களத்தில் இருக்க வேண்டுமாம்!

### பண்டிதருக்கு துணை அமைச்சர் பதில்!

"அரசபணி' கடிதங்களை அனுப்புபவர்கள் தங்கள் உத்தியோக அச்சுமுத்திரையை சிங்களத்தில் இடவேண்டும். அப்படி சிங்களத்தில் அச்சுமுத்திரையிடப்படாத கடிதங்களை தபால் கந்தோர் சட்ட விதிகளின் பிரகாரம் அஞ்சல் அலுவலகம் ஏற்க முடியாது."

—இவ்வாறு பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் கேள்வியொன்றுக்கு 4-5-71ல் சபைபிரதிநிதிகள் சபையில் பதிலளித்த தபால் துணை அமைச்சர் வி. ரி. ஜி. கருணரத்ன கூறியுள்ளார்.

தமிழில் மட்டும் தமது உத்தியோக அச்சுமுத்திரையை உடையதும்சிங்களத்திலும் தமிழிலும் 'அரசபணி' என்று பொறிக்கப்பட்டதுமான பதிவுக்கடிதங்களை ஏற்றுக்கொண்ட வெள்ளவத்தை அஞ்சல் நிலையம் 21-9-70ல் இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த புதுக்காரணம் யாது என்று பண்டிதர் கேட்டிருந்தார்.

இதற்குப் பதிளித்த தபால் துணை அமைச்சர், கடந்த ஆறு ஆண்டுகளாக தபால் சட்ட விதிகளை சரியாக புரிந்து கொள்ளாத காரணத்தினுல் தான் பண்டிதரது கடிதங்களை வெள்ளவத்தை தபால் நிலையத்தினர் ஏற்றதாகவும், தபால் சட்டத்தின் 8வது பிரிவின் கீழ் உண்டாக்கப்பட்ட 85, 86ம் விதிகளின்படி அனுப்புவரின் உத்தியோக முத்திரை சிங்களத்தில் இருக்கவேண்டுமென்றும், பண்டிதரது கடிதத்தில் சிங்கள உத்தியோக முத்திரை இல்லாத காரணத்தினுல் 21-9-70 கடிதம் ஏற்கமறுக்கப்பட்டதென்றும் தெரிவித்தார்.

## தமிழ் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இல்லை!

பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் இல்லை!

பல்கலைக் கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்காக பொறியியல், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், பொருளாதாரம், வரலாறு, சட்டம் எனவரும் பாடங்களில் சிங்களத்தில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களிலும் பிற வகை நூல்களிலும் இன்னும் தமிழில் வெளியிடப்படாத நூல்கள் யாவை என்று ஊர்காவற்றுறைப் பா. உ. திரு: கா. பொ: இரத்தினம் கல்வி அமைச்சரைக் கேட்டிருந்தார்.

இதற்கு 6-5-71ல் பாராளுமன்றத்தில் விடையளிக்கப்பட்டது. இந்த விடையின்படி பொறியியலில் இதுவரை சிங்களத்திலும் தமிழி

(11-ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....!

ஆசிரியர் கோவை மகேசன் எழுதும்
அரசியல் மடல் — ...பக்கம் 3
அண்ணுவின் தமிழ்நாடு கண்டேன்
தொடர் கட்டுரை ஆரம்பம் — பக்கம் 6
தணிக்கை அதிகாரியால் முழுமையாக வெட்டப்பட்டுவிட்டது.
கவிஞர் கண்ணதாசன்
தத்துவக் கட்டுரை — பக்கம் 5
கலைஞர் கருணுநிதியின்
கவியரங்கக் கவிதை — பக்கம் 6
முரசொலிமாறனின்
வங்க நாட்டு விடுதலை வரலாறு — பக்கம் 7
ஜெயகொடி, கா. பொ. இரத்தினம்
வி. தருமலிங்கம்
ஆகியோரது உரைகள் — பக்கம் 4,8,9,
அசீஸ்
தொப்பி புரட்டிய கதை — பக்கம் 9
அத்தான் கவிதை — பக்கம் 7

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

முழுவதும்

தணிக்கை அதிகாரியால்

வெட்டப்பட்டு

விட்டது.

## தமிழர் தம் குலவிளக்கே! பல்லாண்டு வாழ்க!



பேரறிஞர் அண்ணுவுக்குப்பின், தமிழ் நாட்டின் நாலுகோடித்தமிழர்களின் தலைமையை ஏற்று தமிழினம் தலை நிமிர்ந்து வாழத்தக்க முறையில் தமிழகத்தை ஆட்சிபுரிந்து வரும் தமிழர் தம் குல விளக்காம் கலைஞர் கருணநிதியவர்கள் ஜூன் மூன்ரும் நாள் நாற்பத்தெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிருர்.

இன்பத்தமிழ் மொழியின் புகழ் உலகெங்கும் பரவவும், தமிழகம் தன் பண்டைப் பெருமைதனை மீண்டும் அடைந்து வலிவுடனும் பொலிவுடனும் சுயாட்சி பெற்று வாழ்ந்திடவும், இல்லாமையும், ஏழ்மையும் ஒழிந்து தமிழகம் சமதர்மப் பூங்காவாக மலரவும் ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்து வரும் திருவிடத்தின் ஒளி விளக்காம் நம் கலைஞர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப்பணி ஆற்றிட வேண்டுமென இதயம் குளிர ஈழத்தமிழினத்தின் சார்பாக வாழ்த்துகிருேம்.

உலகெங்கும் வாழும் ஆறுகோடி தமிழர்களின் நம்பிக்கைத் தலைவா! அண்ணன் கண்டெடுத்த அழகு தமிழ் நல்முத்தே! நீ நீடூழி வாழ்ந்து தமிழர் துயர் போக்கிட அண்ணு எழுதிய 'தமிழ் நாடு' எனும் தலைப்பின் கீழ் புது வரலாற்றை உருவாக்கி வைப்பாயென்று உறுதியுடன் எதிர்பார்க்கிருேம். வாழ்க கலைஞர்! வளர்க அண்ணுவின் இலட்சியங்கள்!

## சிங்களம் மட்டும் சட்டம் அநியாயமானது!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாஷை விஷயத்திலே நாமும் அரசாங்கமும் ஒரு சமாதான முடிவுக்கு வர வேண்டும். அப்படி முடிவுக்கு வராவிட்டால் தமிழ் மக்கள் இந்நாட்டிலே இருக்கக்கூடாதென்று சிங்கள மக்கள் சொல்வதற்குச் சமமாக இருக்கும். இது விஷயத்திலே நாம் மிகவும் கவனம் செலுத்துகின்ருேம்.

இந்தப் பிரேரணையில் நாம் குறிப்பிடுவது என்னவென்ருல், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குத் தாய்மொழி மூலம் கல்வியூட்டப்பட வேண்டும் என்பதாகும். சென்ற அரசாங்க காலத்தில் திருவாளர் டட்லி சேனநாயக்க பிரதமராயிருந்த போது அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்.

### தாய் மொழி

ஒரு பிள்ளைக்குத் தாய் மொழியில் படிப்பித்தல் வேண்டும் என்று கல்வி நிபுணர்கள் சொல்கின்ருர்கள். ஒரு பிள்ளையைத்தாய்மொழியில் படிப்பித்தால் தான் அந்தப் பிள்ளை கஷ்டமில்லாமல் சொற்களைப் பாவிக்கக் கூடியதாக இருக்கும். அதாவது, அந்தப் பிள்ளை வீட்டில் பழகிய பாஷையில் தான் அவர்களுடைய கல்வியைக் கொண்டு செலுத்த வேண்டும்.

இப்பொழுது கொழும்பு போன்ற நகரங்களிலே வசிக்கின்ற எத்தனையோ தமிழ்ப் பெற்ருேர்கள் வீட்டில் சிங்களம் பேசுகிருர்கள். அவர்களுடைய பிள்ளைகளும் சிங்களத்தைப் பேசுவதால் அவர்களுடைய தாய்மொழி சிங்களம் தான் என்று நாம் ஒத்துக்கொள்ள முடியாது.

### பெற்ருேர் விருப்பம்

தமிழ்ப் பிள்ளைகளுடைய தாய்மொழி தமிழ் தான். பெற்ருேர் ஒத்துக் கொடுத்த போதிலும் அவர்களுக்குச் சிங்களத்தில் கல்வி ஊட்டக் கூடாது என்பது எங்களுடைய கொள்கை. அதாவது, பெற்ருேர் விரும்பினலும் விரும்பாவிட்டாலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழிலே தான் பாடம் படிப்பிக்க வேண்டும். அதுபோல் சிங்களப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தில் தான் படிப்பிக்க வேண்டும்.

இப்பொழுது இலங்கை இருக்கின்ற நிலையில் தமிழ்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்தபட்சக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படின் . . . ?

அன்பு நண்பா,

கடந்த இருதிங்களாக உன்னுடன் தொடர்பு கொண்டிட—மடல் தீட்டிட—முடியவில்லை; இதற்குக் காரணம் நானல்ல; நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியே யென்பதை நீ அறிவாயே! உனக்கு மடல் தீட்டிட முடியாமற் போனாலும், சத்தியத்தின் வலிமை பற்றியே நான் கடந்த இரு திங்களாக எண்ணி எண்ணி வியந்து கொண்டிருந்தேன். சத்தியத்தை முழுக்கமுழுக்க நம்பி, சத்திய வழியில் சென்று கொண்டிருக்கும் ஈழத்தமிழக மக்களுக்கு சத்தியம் எவ்வளவு தூரம் பாதுகாப்புத் தருகிறது; எத்துணை தூரம் துணைநிற்கிறது என்ற உண்மையை நிதர்சனமாக கண்டு கொள்ளும் வாய்ப்பன்றோ நமக்கு கிட்டியது!

சத்தியாக்கிரகம் என்பதன் பொருள் சத்தியத்தை தழுவிக் கொள்ளுதல் என்பதாகும். ஈழத்தமிழர்கள் சத்தியாக்கிரகிகள்—அதாவது சத்தியத்தை தழுவிக்கொண்டிருப்பவர்கள். அவர்களை சத்தியம் ஒருபோதும் கைவிடாது; அறம், அறமல்லாதனவற்றை அழித்தே தீரும்; என்பது நாம் கண்டுகொண்ட உண்மைகளாகும்;

நண்பா, இளங்கோ படைத்த அமர காவியமாம் 'சிலப்பதிகாரம்' நீ படித்ததுண்டல்லவா? அச் சிலம்பு கூறும் 'அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்' என்கின்ற வார்த்தை எவ்வளவு தூரம் தீர்க்கதரிசனம் நிறைந்தது என்பதை நான் எண்ணிப்பார்த்துக் கொண்டேன்;

நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி—இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நிலைபற்றியெல்லாம் உனக்கு எடுத்துக் கூறிட எத்தனை எத்தனை கருத்துக்கள் என் உள்ளத்தில் அலைபோலக் கிளம்புகின்றன தெரியுமா? இருந்தும் உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் உனக்கு எடுத்துக் கூறிட முடியாத நிலை; சுதந்திரமாக, சுயேச்சையாக கருத்துக்களை வாரிவழங்க முடியாத நிலை இன்று!

காரணம்தான் அறிவாயே! பத்திரிகைத் தணிக்கையென்ற பெயரால் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கருத்துச்சுதந்திரம், எழுத்துரிமை யாவும் பறிக்கப் பட்டிருக்கிறது இன்று! உனக்கு எழுதிடும் இந்த மடல் கூட தணிக்கை அதிகாரிக்கு அனுப்பப்பட்ட பின்னரே வெளிவருகிறது! ஆம் நண்பா, நீயும் நானும் 'மனம் விட்டு' கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியாத நிலை இன்று இருக்கிறது நாட்டில்!

ஆனாலும் நண்பா, புதிய அரசியலமைப்புப் பற்றி யாரும் சுயேச்சையாக கருத்து வெளியிடலாம்; எண்ணங்களை எடுத்தியம்பிடலாம்; அவற்றுக்கு தடை ஏதுமில்லை! தணிக்கை ஏதுமில்லையென அரசியல் நிர்ணய சபையிலே அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா அளித்த உறுதிமொழியை கண்ட பின்னரே இந்தக்கிழமை உனக்கு மடல் தீட்டிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

நண்பா, திருமணத்தை ஆயிரம் காலத்துப் பயிர் என்று கூறுவதை நீ கேட்டதுண்டல்லவா? ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பதும் அப்படிப்பட்ட தொன்றே! ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது ஆண்டுக்கொருமுறையோ ஐந்தாண்டுக்கொருமுறையோ புதிது புதிதாக திரும்பத்திரும்ப விரும்பியபோதெல்லாம் எழுதிக்கொண்டிருக்கும் ஒரு சாசனமல்ல.

ஒரு நாட்டிற்குப்புதிய அரசியலமைப்பு ஒன்றினைத்தயாரித்திடும் போது ஆற அமர அவசரமின்றி நாட்டின் பல்வேறு பகுதிமக்களின் கருத்துக்களையும், விருப்பங்களையும் அபிலாசைகளையும் அறிந்து அவற்றைப்பிரதிபலித்திடும் வகையிலேயேபுதிய சாசனத்தை எழுதிட வேண்டும். இதற்கு நாட்டில் அமைதியும் மக்கள் அச்சமின்றித்தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்திடும் சுதந்திரமும் இருந்திட வேண்டும் அப்படியின்றி அவசர கோலத்தில் அள்ளித் தெளிப்பது போல பெரும்பான்மைப் பலத்தை மட்டுமே நம்பி தயாரிக்கப்படும் அரசியல் சாசனம் அது எழுதப்படும் கடதாசியின் பெறுமதியைக்கூடப்பெறமுடியாது;

நண்பா, அரசியல் நிர்ணய சபையை அவசர காலச்சட்டம் நீக்கப்படும்வரை ஒத்திவைத்திட வேண்டுமென நம்மவர்களும், மற்றும் எதிர்க்கட்சியினரும்-ஏன் ஆளுங் கட்சியிலுள்ள சிலர் கூட-அரசாங்கத்திடம் எவ்வளவோ வலியுறுத்தியும், இடித்துக்கூறியும் எல்லாமே விழலுக்கிறைத்த நீராகிவிட்டன: நாடுசுடுகாடாகக் காட்சியளிக்கிறது; நாட்டுமக்கள் குழம்பிக் கிடக்கின்றனர்; நாட்டில் அமைதியான சூழ்நிலை இல்லை; எனவே அரசியல் நிர்ணய சபைக்கூட்டத்தை ஒத்திவையுங்கள்; என்று முதலவையில் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கும் அரசினர் காதுகொடுத்திட மறுத்துவிட்டனர்.

அரசியல் நிர்ணயசபை ஒத்திவைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திய நமது உடுவில் பா. உ. தருமலிங்கம், அதற்கு கூறிய காரணம் மிக முக்கியமானது;

அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பேசும் மக்களுக்கு அதிமுக்கியமான திருத்தங்கள் எல்லாம் விவாதிக்கப்படவிருக்கின்றன; அனைத்து தமிழ்க்கட்சிகளும் கூட்டாக அரசியலமைப்பு அடிப்படை தீர்மானங்களுக்கு அனுப்பிவைத்த திருத்தங்கள் இங்கு விவாதத்துக்கு வரவிருக்கின்றன; இத்திருத்தங்கள் பற்றி விவாதிப்பதற்குமுன் இக்கோரிக்கைகள் பற்றி அரசாங்கக்கட்சித்தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசி ஒரு சமாதானத்தீர்வு காண்பது அவசியம்; அப்படி ஒரு சமாதானத் தீர்வு கண்டிடாமல், திருத்தங்களை வெறுமனே முன்மொழிந்து வழிமொழிந்து உரைநிகழ்த்தி, வாக்கெடுப்புக்கு விடுவதால் பயனேதுமில்லை; ஏனெனில் அரசாங்கம் தன்னிடம் இருக்கும் பெரும்பான்மைபலத்தை உபயோகித்து தமிழ் இனத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள-தமிழினத்தின் உயிர்ப்பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட இத்திருத்தங்களை நிச்சயமாக நிராகரித்து விடும்; எனவே தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைப்பிரச்சினைகளில், மொழிப்பிரச்சினையில், தமிழ்ப்பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு காணுமட்டுமாவது அ. நி. சபையை தள்ளிப் போடுங்கள்; என்று திரு. தர்மலிங்கம்

## அரசியல் மேடை

விடுத்த நியாயமான - உருக்கமான - வேண்டுகோளைக்கூட அரசியல் அமைப்புச்சட்ட அமைச்சர் ஏறெடுத்து பார்க்க மறுத்துவிட்டார்.

## இப்பந்தி தணிக்கை செய்யப்பட்டது

சிறுபான்மை மக்களுக்கும் உரிமைகள் வழங்கிடவேண்டும்; அவர்களது அபிலாஷைகளையும் நிறைவேற்றிடவேண்டும்; அவர்களது உரிமைகளையும் உள்ளடக்கி, அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலே புதிய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்படவேண்டுமென்கின்ற ஆர்வம், அரசுக்கு துளியாவது இருந்திடின், அரசியல் நிர்ணய சபையை ஒத்திவைத்து, தமிழர் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி தமிழினத்தின் கோரிக்கைகள் குறித்து ஓர் உடன்பாடு கண்டுகொண்ட பின்னரல்லவா அரசியல் சட்டத்தை எழுதிடவேண்டும்? இதுவன்றோ ஒரு சனநாயக அரசின் கடமையாகும்?

## இப்பந்தி தணிக்கை செய்யப்பட்டது

நண்பா, தமிழினத்தவர் இந்நாட்டில் 'சிறுபான்மை' இனத்தினர் அல்லர்! இலங்கை காலம் காலமாக ஒரே நாடாக இருந்திடின் அன்றோ நாம் சிறுபான்மையினர்! 350 ஆண்டுகளுக்கு முன்பு வரை 'இலங்கை' என்று ஒரே அரசியலமைப்புக்கொண்ட ஒரு நாடு இருந்ததில்லை; மாறாக, தமிழ் இலங்கை; சிங்கள இலங்கை; கண்டிய இலங்கை; என்று மூன்று தனித்தனி நாடுகளாகவே பிரிந்து இருந்திருக்கிறது: தமிழர்கள் தனி இனத்தினராக, தனி அரசு நடத்தி வந்திருக்கின்றனர். அப்போதெல்லாம் தமிழினத்தவரை சிறுபான்மையினர் என்று யாரும் அழைத்ததில்லை—வெள்ளைக்காரன் தனது வசதிக்காக தனித்தனி அரசுகளை ஒரே நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்து 'ஒரே இலங்கை' ஆக்கினான் 150 ஆண்டுகளுக்கு முன்பு!

எனவே 'சிறுபான்மையினர்' என்ற வட்டத்துக்குள் வைத்து தமிழினத்தின் உரிமைகளைப்பறிப்பதை நாம் பார்த்துக்கொண்டு வாழாவிருக்கமுடியாது. தமிழினத்தவர்கள் இந்நாட்டில் தனி இனத்தவர்களே தவிர சிறுபான்மை இனத்தினரல்லர்!

தமிழினத்துக்கென சொந்தமான தனி மொழியிருக்கிறது; சொந்தமான தனிப்பிரதேசம் இருக்கிறது: சொந்தமான தனி கலாசாரம் இருக்கிறது; சொந்தமான தனி வரலாறு இருக்கிறது; ஆகவே தமிழ் மக்கள் தங்கள் பிரதேசத்தில் தமது சொந்த அரசை அமைத்து ஆட்சிபுரிய உரிமைபடைத்தவர்கள்; தமிழினத்தின் நியாய பூர்வமான உரிமைகளை இன்றைய அரசியல் நிர்ணய சபை உதாசீனம் செய்யுமானால் தமிழினம் தனது சுயநிர்ணய உரிமையைப்பயன்படுத்துவதைத்தவிர வேறு வழியில்லை யென்பதை ஆட்சியாளர் புரிந்து கொண்டிட வேண்டும்!

நண்பா, அரசியல் நிர்ணய சபையில் இதுவரை தமிழினத்தின் சார்பில் கொண்டுவரப்பட்ட அத்தனை திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன. அரசியல் நிர்ணய சபை, பெயரளவில்தான் அரசியல் நிர்ணய சபையாக இருக்கிறதேதவிர செயலளவில் அது மற்றோர் 'பாராளுமன்றமாக'வே காட்சிதருகிறது. பிரச்சினைகள் யாவும் கட்சி அடிப்படையிலேயே கண்ணோட்டமிடப்படுகின்றன.

அரசியல் நிர்ணய சபை, ஏற்கெனவே நாட்டிலுள்ள இன மொழிப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிட முயலாமல் இன்னும் நிலைமையை சிக்கலாக்கி வருகிறது; தமிழினத்துக்கு அடிப்படை உரிமைகளைக்கூட அளிக்காமல், தமிழினத்தை அழித்தொழிப்பதற்கு 'கடைசி ஆணி' வைக்கும் முயற்சியிலன்றோ சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்ட அ. நி. சபை ஈடுபட்டு வருகிறது!

ஒற்றையாட்சி அரசியலமைப்பு இந்நாட்டில் இருக்கும்வரை, தமிழ் சிங்கள இனங்களிடையே சமாதானம் ஏற்படமுடியாது; சமதர்மம் நிலைக்கவும் முடியாது; சிங்கள இனம் 'ஆண்டான்' இனமாகவும், தமிழினம் ஆளப்படும் இனமாகவுமே வாழநேரிடும்; ஆகவே உலகத்து சோசலிசநாடுகளைப் பின்பற்றி-ஒற்றையாட்சிஅரசியலமைப்பை கைவிட்டு இணைப்பரசை ஏற்படுத்துங்கள் என்று-தமிழ்ப்பிரதிநிதிகள் எவ்வளவோ கனிவுடன், எவ்வளவோ பணிவுடன் கேட்டார்கள்!

முடியாது; ஒற்றையாட்சியே என்றென்றும் இருக்கும்;..............................

இவ்வரிகள் தணிக்கை செய்யப்பட்டன

..............................என்று பிடிவாதமாக மறுத்துவிட்டது சிங்கள அரசியல் நிர்ணய சபை!

எந்த ஒரு சோசலிச நாட்டிலும் மத சார்பான அரசு கிடையாது; இலங்கையும் ஓர் உண்மையான சோசலிச நாடாக மலர்ந்திட வேண்டுமானால், மதசார்பற்ற அரசாக அது அமைந்திட வேண்டும்—அதே நேரத்தில் இந்நாட்டின் முக்கிய நான்கு மதங்களான பௌத்தம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும், அரசின் கடமையாதல் வேண்டும்; என்று கோரி, நம்மவர்கள் வாதாடினர்; எத்தனையோ ஆதாரங்களை எடுத்து வீசினர்! ஆனால் பலன் என்ன!

முடியாது; இந்நாட்டின் அரசியலில் பெரும்பான்மை இனத்தினர் மதமான பௌத்தத்துக்கே பெருமைமிக்க முதலிடம் தருவோம்; பௌத்தத்துக்கும் ஏனைய சிறுபான்மையினர் மதங்களுக்கும் சமத்துவம் தரமாட்டோம்; என்று கூறிவிட்டது

..............................

இவ்வரிகள் தணிக்கை செய்யப்பட்டன

அரசியல் நிர்ணயசபை!

அடிப்படை உரிமைகளில் இந்நாட்டில் வாழும் மக்களுக்கிடையே பேதம் காட்டுதல் ஆகாது—'பிரஜை' யென்றுமட்டும் அடிப்படை உரிமையையொட்டிய தீர்மானங்களில் குறிப்பிடுதல்—இன்னும் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படாமல் 'நாடற்றவர்கள்' என்ற பட்டியலில் இருக்கும் 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்களை மிகவும் பாதிக்கும்; மலையகத் தமிழர் இந்நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்; அவர்களும் பயனுறத்தக்கவகையில் 'பிரஜை' என்று இருப்பதை 'மக்கள்' என்று

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பாகுபாடு முற்றாக ஒழிய வேண்டும்!

வல்வை ஒற்றுமை மாநாட்டுத் தீர்மானங்களில் ஆறும், ஏழாம் தீர்மானங்களை முன்மொழிந்து அரசியல் நிர்ணய சபையில் உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி ஆற்றிய உரை இது.

## இந்திய அரசியல் அமைப்பிலுள்ள விதி இங்கும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்!

### வல்வை மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்து ஜெயக்கொடி பேச்சு!

தலைவர் அவர்களே, ஒழுங்கு விதிகளின் உப விதி மூன்றின்கீழ் பின்வரும் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளுமாறு நான் பிரேரிக்கின்றேன்:

"(1) இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும், சமயம் பற்றியும் இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்பட வேண்டும்;

(2) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ, நிர்வாக ஒழுங்கீனங்களை பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல் சாசனத்தில் அமையவேண்டும்."

இப்பிரேரணையின் முதலாவது பகுதி,

"இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும், சமயம் பற்றியும் இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்பட வேண்டும்."

#### இந்திய சாசன விதி


இந்திய அரசியலமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் என்று கள் எல்லாரும் ஒற்றுமையாக இருந்து கோரிக்கைகளை எழுப்பவேண்டும் என்ற ஒரு அபிப்பிராயம் உருவாகிய காரணத்தினாலே, சில அன்பர்கள் ஒரு மகா நாட்டைக் கூட்டினார்கள். அந்த மகாநாட்டை வல்வெட்டித்துறையிலே கூட்டுவது என்று அவர்கள் தமிழ்ப் பிரதேசத்திலேயுள்ள தமிழர்களுடைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து இருந்தார்கள்.

அந்த அழைப்பின் காரணமாக 1971 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 7ஆம் தேதி வல்வெட்டித்துறையிலே ஒரு கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்துக்குச் சமூகம் கொடுத்தவர்களுடைய பெயர்களை நான் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன். அந்தக் கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கும் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் அவர்களுடைய பெயர்கள் வருமாறு:

திருவாளர்கள் இ. நாகராசா, சி. சுந்தரலிங்கம், மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், வ. நவரத்தினம், க. சிவானந்தசுந்தரம், த. சங்கரப்பிள்ளை, இ. நட

தையும் மதிப்பையும் பெற்றிருந்த திரு செ. சுந்தரலிங்கம் அவர்களும் சமூகம் கொடுத்திருந்தார்கள். தமிழ்ப் பிரதேசத்தை ஒரு தனி நாடாக ஆக்கவேண்டுமென்று கோரும் வி. நவரத்தினம் அவர்களும் அவரின் காரியதரிசியும் சமூகம் கொடுத்திருந்தார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசியான பரமானந்தராசா அவர்கள் சபையில் எழுந்து நின்று, நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திருவாளர் அருளம்பலம் அவர்கள் சுக



மொழிகளாக இருக்க வேண்டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ்விரு மொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும்,

(3) இலங்கையின் எப்பாகத்திலும் சிங்களவரோ, தமிழரோ தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்;

(4) ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களமோ, தமிழோ அவரவர் தாய் மொழியே போதனா மொழியாய் இருத்தல் வேண்டும்; திறமையின் அடிப்படையில் இலவசமாக அக்கல்விக்கு வசதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

(5) உயர்தரக் கல்வி நிலையங்களில் சேருவதற்கோ, அரசாங்க சேவையில் சேருவதற்கோ, தன் தாய்மொழியில் பரீட்சை எடுத்து தன் தகுதிக்கேற்பசேரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு;

(6) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ, நிர்வாக ஒழுங்கீனங்களைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல்

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளில் இரண்டையே நான் இங்கு இரு திருத்தப் பிரேரணைகளாகப் பிரேரித்திருக்கின்றேன். அந்தக் கோரிக்கைகளில் அனைவரும் கைச்சாத்திட்டிருக்கின்றனர். அதன் "போட்டோஸ்ரட்" பிரதியையும் நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

#### பிறப்பால் சாதி இல்லை இதுவே எமது கொள்கை

இந்தச் சாதி விடயத்திலே தமிழர்களைப் பொறுத்த அளவிலே.

சாதி இரண்டொழிய
வேறில்லை
சாற்றுங்கால்
நீதி வழுவா
நெறிமுறையில்
மேதினியில் இட்டார்
பெரியோர்
இடாதார்
இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி.

என்பதுதான் அவர்களது கொள்கையாக இருந்து வந்துள்ளது. இட்டோர் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்பதுதான் எமது மரபு. பிறப்பால் சாதி இல்லை என்பது எமது கொள்கை.

"பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில்
வேற்றுமையான்"

என்பது திருவள்ளுவர் கூற்று. அவர்கள் செய்யும் தொழில்களைப் பார்த்தே இன்று சிலர் சாதி கற்பிக்கின்றார்கள். தொழில்களின் அடிப்படையில் பொருளாதார ஏற்றதாழ்வுகளைச் சாட்டாக வைததும் சிலர் இன்று சாதி கற்பிக்கிறார்கள். இந்த சாதிப் பிரச்சினை வட இலங்கையில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் நிலவுகின்றது. சோஷலிசப் பாதையில் மக்கள் செல்லுகின்ற இக்காலத்திலும் சாதி வெற்றுமை இலங்கை முழுவதிலும் இருக்கின்றதென்பதை மிகவும் மனவருத்தத்துடன் கூற வேண்டி இருக்கின்றது.

## வல்வைமாநாட்டு முக்கியத்துவம்பற்றி அரசியல் நிர்ணய சபையில் விளக்கம்!

சொல்லும் பொழுது அந்த விதிகள் என்ன சொல்கின்றன என்பதை நாம் சற்றுக் கவனிக்கவேண்டும். இந்திய விதிகளின்படி, அடிப்படை விதிகளின் 17 ஆவது சரத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:—

"17. Untouchability is abolished and its practice in any form is forbidden. The enforcement of any disability arising out fo "Untouchability" shall be an offence punishable in accordance with law."

இது இந்திய சாசனத்தில் உள்ள விதி. நியமன அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் சபையில் சமர்ப்பித்த மகஜரிலும் இதையே கூறியிருக்கிறார். நியமன அங்கத்தவர் சமர்ப்பித்த மகஜரின் இரண்டாவது சரத்திலே இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது:

"Separate chapter in constitution for the safeguard of the basic rights of minority Tamils and the safeguard of rights of scheduled caste similar to the Indian Constitution."

எங்களுடைய கட்சியின் பிரேரணைகள் இருக்கும் பொழுது தனியாக ஏன் இப்படிப் பிரேரிக்க வேண்டும் என்ற கேள்வி எழக் கூடும். அதன் காரணத்தால், வட இலங்கையிலே நடந்த ஒரு சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறேன்.

#### ஒற்றுமை முன்னணி

இந்த அரசியல் சாசனம் வருகிற நேரத்திலே தமிழ் மக்களிடையே பிரிவினை இருக்கக் கூடாது; தமிழர்

ராசா, தா. குணரத்தினம், ந. சிவநேசன், நா. சிவசுப்பிரமணியம், தி. பரமானந்தராசா, சு. நடராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் அரு. சபாரத்தினம்பிள்ளை, ச. ஞானமூர்த்தி, ஆ. வே. வேற்பிள்ளை, இவர்களை விட இ. கதிரவேற்பிள்ளை, சே. மா. செல்லத்தம்பு, க. ஜெயக்கொடி, வ. ந. நவரத்தினம், க. துரைரத்தினம், வி. தர்மலிங்கம் ஆகியோரும் பங்குபற்றினர்.

#### அருளம்பலத்தின் சுகவீனம்

இலங்கையிலே, தமிழ்ப் பிரதேசங்களிலே முக்கிய கட்சியினராக, ஒரு காலத்திலே தமிழ் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்த தமிழ்க் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் இங்கு சமூகம் கொடுத்திருந்தார்கள்.

மு. சிவசிதம்பரம் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ஆவர்: அவர் பிரதிநிதிகள் சபையின் உப சபாநாயகராக இருந்தவர். பத்து வருடங்களாக பெருமைமிக்க உடுப்பிட்டித் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவராய் இருந்தவர். கட்சியின் செயலாளர்களாக இருக்கும் தா. சங்கரப்பிள்ளையும் தி. பரமானந்தராசாவும் அங்கு சமூகம் கொடுத்திருந்தார்கள். இன்னும் வட பகுதியிலே சென்ற தேர்தலிலே தமிழ்க் காங்கிரசின் சார்பிலே போட்டியிட்டு வென்ற மூவரையும் தவிர மற்ற எல்லோரும் அங்கு சமூகம் கொடுத்திருந்தார்கள். அவர்களைவிட தமிழ் மக்களின் அபிமானத்

வீனம் காரணமாக வரமுடியாமல் இருப்பதாகவும் மற்றவர்களுடன் தாம் ஒத்துழைப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்கள்.

இவர்கள் எல்லோரும் தமிழ் மக்களுடைய எதிர்கால நன்மையைக் கருதி, அலசி ஆராய்ந்து ஏகமனதாகச் சில தீர்மானங்களை எடுத்தார்கள். அவர்கள் அந்தத் தீர்மானங்களின் இறுயிதிலே கையெழுத்திட்டார்கள். அந்தத் தீர்மானங்களாவன:—

"1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி வல்வெட்டித்துறையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய நாலு கட்சிகளின் உறுப்பினர்கள் ஏகோபித்து, தமிழ் இனத்தின் சார்பில் அரசியல் நிர்ணய சபைக்குக் கீழ்கண்ட குறைந்த பட்சக் கோரிக்கைகளை விடுப்பதென்றும், இவையே இலங்கை வாழ் தமிழினத்தின் குறைக்க முடியாத கோரிக்கைகள் என்று பிரகடனப் படுத்துவதென்றும் தீர்மானிக்கின்றனர்.

#### கோரிக்கைகள்

(1) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டும். அவற்றின் திட்டவட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டும்.

(2) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் நீதி நிர்வாக

சாசனத்தில் அமைய வேண்டும்: நீதி நிர்வாகத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இருத்தல் ஆகாது;

(7) இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும், சமயம் பற்றியும், இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்பட வேண்டும்.

(8) இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும்; ஆனால் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேண வேண்டும்.

(9) (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின்.

(ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்கு தகுதியுடையவராயின்

(இ) 15-11-48க்கு முன் இருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவராயும், இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விரும்புவராயும் இருப்பின்,— அவர்கள் எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும். வம்சாவளிப் பிரஜைக்கும், பதிவுப் பிரஜைக்கும் எவ்வித பாகுபாடும் இருத்தல் ஆகாது. எக்காரணம் கொண்டும் எவருடைய பிரசா உரிமையும் பறிக்கப்படலாகாது."

அண்மையில் தென்னிலங்கையிலுள்ள ஒரு பாடசாலைக்கு குறைந்த சாதி மாணவர் ஒருவர் சென்ற காரணத்தினால் அங்கே பெரும் கலவரம ஏற்பட்டது; இதே போல யாழ்ப்பாணத்திலும் சாதி காரணமாகக் கலவரங்கள் நடைபெற்றுள்ளன. இத்தகைய சம்பவங்களை ஒழித்துக்கட்ட வேண்டும். சாதிப் பாகுபாடுகளை ஒழிக்க முயற்சிகள் மேற்கொளளப்பட வேண்டும். சாதிப் பாகுபாடு கற்பிப்பதை ஒரு குற்றமாக அரசியற்சாசனத்தில் குறிப்பிட வேண்டும்.

#### சாதி ஒழிப்பும் சமஷ்டிககட்சியும்

சாதிப்பாகுபாட்டை ஒழிக்க வட இலங்கையில் எத்தனையோ ஆண்டுகளாக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் நான் அறிந்த அளவில் பலர் பிரயாசைப்பட்டு உழைத்திருக்கிறார்கள். லங்கா சமசமாஜக் கட்சியைச்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பா: நாதன்,
அல்வாய்.

கே:- இலங்கையில் சுதந்திரன் வெளிவராவிடின்......?

ப:- துரோகிகள்பாடு ஒரே கொண்டாட்டமாகிவிடும்!

ஃ

வீ: இராமசாமி,
புதுக்குளம்.

கே:- சென்ற தேர்தலில் வவுனியா கம்யூனிஸ்ட் கட்சியில் அபேட்சகராகப் போட்டியிட்டு கட்டுப்பணத்தை இழந்த அரசியல் வாதியின் வீட்டு வாசலில் (கேற்றில்) உள்ள ஒரு போட் பலகையில் அழகிய தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டு தனிச் சிங்கள எழுத்துக்கள் மட்டுமே இடம் பெறுகின்றது. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:- தமிழ் ஒழிப்பில் கம்யூனிஸ்டுகள் ஈடுபட்டிருப்பதை இப்படி அவர் செயல் மூலம் காட்டுகிறார்!

ஃ

க. தங்கராசா,
ரூகம.

கே:- வல்வெட்டித்துறையில் எல்லாத் தமிழ் கட்சியினரும் ஒன்றுகூடி தமிழருக்கு விமோசனம் தரக்கூடிய (9) ஒன்பது அம்சக் கோரிக்கைகளை உருவாக்கினார்கள் அல்லவா அதற்கு ஏன் அருளம்பலம், தியாகராசா, ஆனந்தசங்கரி மூவரும் வரவில்லை?

ப:- மூவரும் அசல் தமிழர்களாக இல்லாத காரணத்தால்!

கே:- கட்டபொம்மன் காலம் தொட்டு இன்று வரையும் எட்டப்பன் கூட்டம் தொடர்ந்து இருப்பதன் மர்மமென்ன?

ப:- அன்று எட்டப்பனை கட்டபொம்மன் மன்னித்து விட்டதுதான் காரணம்!

நா. பாலசிங்கம்,
கட்டுடை.

கே:- மட்டக்களப்புப் பா. உ. இராசதுரை அவர்கள் நல்லவர் அல்ல என சில நாய்கள் தெருவோரம் குரைத்துக்கொண்டு திரிகின்றனவே? அதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:- அதுதான் நீங்களே கூறிவிட்டீர்களே 'நாய்கள்' என்று! மேலும் சொல்ல என்ன இருக்கிறது?

ஃ

சு: விநாயகமூர்த்தி
கோண்டாவில் தெற்கு.

கே:- தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கு மற்றோர் இனத்திற்கு அதிகாரம் உண்டா?

ப:- தர்மநியாயப்படி கிடையாது—ஆனால் ஒற்றையாட்சி அரசியலமைப்பு பெரும்பான்மை இனத்தினரின் விருப்பங்களை சிறுபான்மை இனத்தின் மீது திணிக்க வகை செய்கிறதே!

கே:- சிவாஜி கணேசன் அவர்களுக்கு நீங்கள் கூறும் புத்திமதியென்ன?

ப:- திரைப்படங்களில் சிறப்புற நடித்து தமிழனின் திறமையை உலகெங்கும் விளங்கவைத்த சிவாஜி கணேசன் தனக்கு வேண்டாத காரியங்களில் எல்லாம் ஈடுபட்டு அந்தப் பெருமையை இழந்து விடக் கூடாது என்பதே!

எஸ்: ராஜா,
அல்வாய் மேற்கு.

கே:- தமிழரசுக் கட்சியின் சமஷ்டிப் பிரேரணை சிங்கள அரசியல் வாதிகளிடம் தோற்றுவிட்டதா?

ப:- இல்லை, சிங்கள மக்களில் ஒரு பகுதியினரே சமஷ்டி கேட்கும் காலம் விரைவில் வந்து சேரும்!

ஃ

கரன்,
கட்டுடை.

கே:- உடுவில் நா.உ. வைப் பற்றி இரண்டு வரிகள்......?

ப:- நிறைய வாசித்து, நிறையச் சிந்தித்து, நிறையப் பேசுகிறார்; பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் இல்லையே என்ற குறையை ஓரளவு போக்கிவருகிறார்;

ஃ

மாலா,
மட்டுநகர்.

கே:- முதலமைச்சர் மு. கருணாநிதியை எமது அரசாங்கங்கள் இலங்கைக்கு ஏன் வர விடுவதில்லை?

ப:- கருணாநிதியை நேரடியாகக் கண்டு, அவரது வீர உரைகளைக் கேட்டால் இங்குள்ள தமிழர்களுக்கு விடுதலை உணர்ச்சி அதிகரித்து விடும் என்ற அச்சம்தான்!

# குவியாத உள்ளம்

கவிஞர் கண்ணதாசன் தத்துவக்கட்டுரைகள் பலவற்றை எழுதியிருக்கிறார். அவரது தத்துவக் கட்டுரைகள் சில வற்றைத் தொகுத்து சென்னை வானதி பதிப்பகத்தார் 'புஷ்பமாலிகா' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டு இருக்கிறார்கள். இந்நூல் வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் கலைஞர் மு.க. தலைமையில் நடைபெற்றது. அந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் ஒன்று இது.

உணர்ச்சிச் சூறுவளியின் மைய மண்டபத்தில் மனித ஈசல் தவியாய்த் தவிக்கிறது.

பின்னிப் பின்னித் தொடரும் ஆசைகளால், மனித உள்ளம் கண்ணாடித்துண்டுகள் போல் சிதறுகிறது.

திரும்பத் திரும்ப அதை ஒட்ட வைத்து உள்ளம் புதுப்பிக்கப் பெறுகிறது.

நின்ற இடத்திலேயே வளரும்வரை வளர்ந்து, நீ வழங்கிய வயதுவரை வாழ்ந்து, பட்டுப்போகும் மரமாக மனித உள்ளமும் இருக்குமானால் சலனங்களும், சபலங்களும் இல்லை.

வயிறு, பசியை அறிவதோடும், உடல்காமத்தை அறிவதோடும் வாழ்க்கை சக்கரம் முடிந்துவிடுமானால், குழப்பங்கள் இல்லை.

அசைவன, அசையாதன, ஊர்வன, பறப்பன ஆகியவற்றுக் கில்லாத இந்த 'உள்ளம்' மனிதனுக்கு மட்டும் ஏன் வழங்கப் பெறுகிறது?

காரியங்களைவிட, நினைவுகளே மனிதனைச் சித்திரவதை செய்கின்றன.

அந்த உள்ளமும் உண்மையை, பொய்யை அறிந்து கொள்ள முடியாத உள்ளமாக இருந்து விட்டால், ஒவ்வொரு படிக்கட்டிலும் ஏமாற்றங்கள் காத்திருக்கின்றன.

ஆசை, பரபரப்பு, ஆத்திரம், கோபம், துக்கம் அத்தனை அலைகளும் இந்தச் சின்னஞ் சிறிய உள்ளத்தில் இருந்தே எழுகின்றன.

கண்கள் போகமுடியாத தூரத்துக்கும் நினைவுகள் ஓடுகின்றன.

நடக்கக்கூடியதை மறந்துவிடும் உள்ளம்; நடக்கவே முடியாத ஒன்றுக்காக ஏங்கித் தவிக்கும்உள்ளம்;

உறவுக்காகவே அழும் உள்ளம்;

பிரிவிலே கலங்கும் உள்ளம்;

வெற்றியிலே மகிழும் உள்ளம்;

தோல்வியிலே துவளும் உள்ளம்.

ஒவ்வொரு தடவையும் உடைந்து உடைந்து மீண்டும் ஒட்டப்பெறும் இந்த உள்ளம், உறுதியாக இருந்தால் ஞானம் கைகூடும என்கிறார்கள் ஞானிகள்.

வெயிலிலே சுருங்கி, மழையிலே விரியும் வாசல் கதவைப்போல், இருவேறு உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல், வெயில் மழை இரண்டிலும் உறுதியாக நிற்கும் மலையைப்போல் நிற்க வேண்டும் என்கிறார்கள்.

அதை நானும் முயன்று பார்த்தேன்.

இறைவா! உன் ஆலயத்திலேயே முயன்று பார்த்தேன்.

கண்கள் உன்னைக் கண்டன;

கரங்கள் உன்னை வணங்கின;

உள்ளமோ கொடுக்க வேண்டிய கடனையும் நாளைப் பொழுதையும் நோக்கிச் சென்றது.

அதைத் திரும்ப இழுத்து வந்து உன்சந்நிதியில் நிறுத்தினேன்.

உடனே கண்கள் தகராறு செய்யத் தொடங்கின.

அழகான பெண்ணொருத்தி உன்னை வணங்குவதற்காக வந்திருந்தாள்.

என் கண்கள் அங்கே பாய்ந்தன;

அவள் கண்கள் இங்கே திரும்பின.

எல்லாம் உன் முன்னிலையிலேயே!

கண்ணைக் கட்டுப்படுத்தினால் உள்ளம் ஓடுகிறது;

உள்ளத்தைக் கட்டுப்படுத்தினால், கண் பறந்து போகிறது.

சரி, கண்ணை மூடிக் கொண்டு வணங்கலாம் என்று தொடங்கினேன்.

உடனே உள்ளம் தன் ஆயிரம் கைகளையும் விரித்துக்கொண்டது.

ஒவ்வொருகையும் வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையைப் பிடித்து இழுத்து வந்தது.

கையினால் துடைத்தால் கையிலேயே 'ஒட்டிக் கொள்ளும் தூலாம்படையைப் போல், எதை விலக்குகிறேனோ அது வேகமாக ஓடி வருகிறது.


குழம்பிலே உப்பு அதிகமென்று தண்ணீரை ஊற்றுகிறேன்; தண்ணீர் அதிகமாகி விடுகிறது;

தண்ணீர் அதிகமென்று உப்பைப் போடுகிறேன்; உப்பு அதிகமாகி விடுகிறது.

நான் ஒரு நல்ல சமையல்காரன் அல்ல! எனக்குத் தெரிகிறது.

அந்தப் பக்குவத்தைப் பெறுவதெப்படி?

அடிக்கடி குடித்துப் பார்த்து உப்பிட்டுச் சம அளவு சுவை சேர்ப்பது போல், அடிக்கடி உள்ளத்தை அடக்கி அடக்கிப் பண்படுத்திக்கொள்ள முயல்கிறேன்;



கவிஞர்
கண்ணதாசன்

ஒழுங்கான சுவை வருகிறது.

அதே நேரத்தில் கூரையில் இருந்த பல்லி குழம்பிலே விழுகிறது.

என்னால் பண்படுத்தப் பெற்றஉள்ளத்தில், என்னை அறியாமலே சலனம் எழுகிறது.

இறைவா!

அங்கேதான் நீ விளையாடுகிறாய்!

ஆத்ம லகானை என் கையிலே பிடித்துக்கொண்டு பயணம் தொடங்கும் போது, வண்டியின் பின் பக்கத்தில் நீ ஏறி உட்கார்ந்துகொள்கிறாய்.

நான் லகானை இழுக்கும் போது, நீ என்னை இழுக்கிறாய்.

பயணமோ என்னுடையது! பாதையோ நீ விரும்பியபடி!

இதற்குத் தப்பியவர்கள் எவரையும் காணவில்லை.

மனிதனை உன் இஷ்டம் போல் ஆட்டி வைப்பதற்குத்தானே இந்த உள்ளத்தைப் படைத்தாய்?

உள்ளத்தை ஒருமுகப் படுத்திவிட்ட எந்த ஞானியையும் கலைத்து வேட்டையாடத்தானே புலன் உணர்ச்சிகளைப் படைத்தாய்?

உனது பாவைக் கூத்து அற்புதமானது.

நீ கட்டிய உலகத்தில் விழுவதற்கு ஏராளமான பள்ளங்கள் உண்டு.

விழாமல் நடக்கக்கூடிய கால்கள் இல்லை.

ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கப் பாம்புகளை வளர்த்த அமெரிக்கப் பெண்ணொருத்தி இந்திய நாகம் கடித்து இறந்து போனாளாம்!

அவளது முடிவு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி இருக்கிறது!

எந்தக் கால், எந்தப் பாறையில் வழுக்கும் என்பது உனக்கு மட்டுமே தெரியும்.

நீ படைத்த உள்ளம் கோடானுகோடி ஆசைகளைக் கண்டுகொண்டது; உன் குறிப்புப் புத்தகத்தைக் காண முடியவில்லை;

மழை வருவதும் புயல் வருவதும் விஞ்ஞானிக்குத் தெரிகிறது; மரணம் வருவது தெரிவதில்லை!

இடியாப்பம்போல உள்ளத்தைப் படைத்துவிட்டு, அதன் தலைப்பைத் தேடுகிற பொறுப்பை எங்களிடம் கொடுத்திருக்கிறாய்.

ஓர் அலை கரையேறினால் மறு அலை பின்னாலேயே வருவதுபோல், 'அப்பாடா, அமைதி' என்று உட்காரும்போது அடுத்த கேள்வி கதவைத் தட்டுகிறது.

பற்று பாசம், பந்தம் எல்லாமே அற்றுப்போய் ஒரு மூலையில் அமர்ந்தால், வயிறு, தான் இருப்பதை நினைவுபடுத்துகிறது.

யானைக்குத் தப்பினால் கரடி பாய்கிறது: கரடிக்குத் தப்பினால் காட்டாறு குறுக்கிடுகிறது.

இந்த உள்ளத்துக்கு எங்கே நிம்மதி?

ஒரே ஒரு நிம்மதி;

'மரணம் அடுத்த எல்லை; மனத்துக்கு ஏன் தொல்லை?'

என்று முடிவு கட்டிவிட்டால் குழப்பத்துக்கிடையே ஒரு தெளிவு; சஞ்சலத்துக்கிடையே ஒரு சந்தோஷம்—அவ்வளவுதான்;

விடிவுக்கும் இரவுக்கும் நடுவே நிற்கும் வேதனை!

அந்த நிம்மதியோடு உன்னைப் பிரார்த்திக்கிறேன்.

மரணத்துக்குப் பிறகு நான் உன்னைச் சந்திக்கப் போகிறேனா என்பது எனக்குத் தெரியாது.

உன்னைச் சந்திப்பதாகவே வைத்துக்கொண்டு முன்கூட்டியே உனக்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்:

இங்கே நான் செய்த எல்லாத் தர்மங்களுக்கும் என் உள்ளந்தான் காரணம்;

நான் செய்த எல்லாப் பாவங்களுக்கும் அதுதான் காரணம்.

இந்த உள்ளம் என்பது எனக்கு வந்ததற்கு நீதான் காரணம்.

ஆகவே,

என் தர்மங்களையும், பாவங்களையும், உன் கணக்கிலேயே வரவு வைத்துக்கொண்டு, நான் உன்னைச் சந்திக்கும்போது என்னை மன்னித்துவிடு.

அதற்குக் காணிக்கையாக இந்தப் புஷ்பத்தை ஏற்றுக்கொள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறம்புமலைப் பாரிவள்ளல் விழாக் கவியரங்கில்

# முதல்வர்கலைஞரின் தலைமைக்கவிதை!

மாதவர்க்கு ஒருபாகம்—
மாது, அவர்க்கு ஒரு பாகம்—
(மாதொரு பாகன்—சிவனுர்!)
மாதவர்க்கு ஒருபாகம்—
இந்த விழாவில் குன்றக்குடி
மடத்தின் தலைவர் அடைகின்ற மகிழ்ச்சியிலே
மாதவர்க்கும் ஒருபாகம் உண்டன்ருே?
ஏனெனில், இது முடித்து எனை
இழுத்துச் செல்ல இருக்கின்ருர் சிவகங்கை—

அந்த மாதவர்க்கு வணக்கம்...
இங்குள்ள அன்பிலார்க்கு வணக்கம்;
என்பால் அன்பிலார் இருப்பின்
அவர்க்கும் வணக்கம்—பெரிய
மருதனையார் மதுரை முத்து மேயர்க்கும்
இன்ன மருதாம் தென்னரசுத் தோழர்க்கும்
வணக்கம்—

தமிழ்த்துறவி என்கின்ருர் நும்மை—
நான் ஏற்பதில்லை—எதைத் துறந்திடினும்
தமிழை மட்டும் துறந்திடேன் எனச்
சொல்லும்—நீவிர்
தமிழ்த்துறவி அல்ல!
தவத்திரு அடிகளாரே! ஏற்றிடுக என் வணக்கம்—
இன்று மதியம்:
மதுரையில் தான் தூங்காமல்
இக்கவியரங்கப்பாடல்தனைத்
தீட்டிவந்தேன்...

அங்கு,
மதுரையில் இருந்த சங்கம்—
இங்கு எழுந்து வந்தது போல்
இருக்கின்ற புலவர் குழுவே!
அனைவர்க்கும் வணக்கம்
சொல்வேன்—
எனக்கிருக்கும் எத்தனையோ வேலைக்கிடை
இதுதான் கவிதை
எனக்கிருக்கும் எனை அழைத்து
என்பால்
தனக்கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்த
—பெருந்
தவத் திருக்கர் அடிகளார் அழைத்திட்டார்;
கன்றுக்குடி இல்லாமல் பால் கறக்கும் வித்தைகற்ற
சென்னைவிட்டு
குன்றக்குடி ஆதீனக் கொடி பறக்கும் பறம்புமலை
வந்துவிட்டேன்.
மலைக்கிருக்கும் அழகெல்லாம் மாரியாலே—இந்த
மலைக்கிருக்கும் அழகெனிலோ மன்னன் பாரியாலே
இங்கு—பலாச்
சுளைக்கிருக்கும் சுவைகூட அவனளித்த
கொடை என்பேன்;
அவனரசில் எலியின்
வளைக்கிருக்கும் பாதுகாப்பாய் பூனையென்பர்—
வயலின்
களைக்கிருக்கும் மதிப்பு கூடத் தன்
பொருளின்பால் வைக்கர வள்ளல்—
முல்லைக்
கொடிக்கிருக்க வீடாக இழையணித்தேர்
ஈந்த அண்ணல்

ஃ ஃ

கதைகளிலே படித்திருப்போம் கலகம் செய்
—நாரதரும்
கந்தவேலன் முன் சென்று...உன் காதலுக்
—கேற்ற நங்கை
வள்ளி என்பேன் வடிவழகி, வட்ட நிலா!
அள்ளி உண்பாய் பார்த்துவிட்டால் என்று கூற
முருகனுமே,
துள்ளியோடித் தோகையினைக் கண்டிடவே
புள்ளி மயில் மீதேறிப் புறப்பட்டு அலையலானுன்
கற்பனை கேளிர்—
ஈங்கோர் கற்பனை கேளீர்!
நெடுந்தொலைவு பயணம் செய்தும் நேரிழையைக்
—காணுமல்
பறம்புமலைக் கருகே வந்து பல்இழந்த
பாட்டி ஒருத்தியிடம்—மீசை
அரும்புகட்டா முருகனுமே வள்ளி எங்கே எனக்கேட்க
பாட்டியோ, மலைமீது ஏறிடுக! கண்டிடலாம்!
என்றவோர் பதிலை
நீட்டி முழக்கி நடந்திட்டாள்—நெடுநல்
வேல்முருகன்,
எறிந்த,
ஈட்டியின் வேகமென ஏறினுன் மலையின்மீது
வள்ளி எங்கே? வள்ளி எங்கே? என அலைந்த
வடி வேலனிடம்...வந்திடுக, கண்டிடுக...எனக்
காட்டினுர் அங்குள்ளோர், மலையெல்லாம்
வள்ளிக்கிழங்கு!
கிழங்குகளின் குறும்பு என்னே...உண்ணும்
கிழங்கினை வள்ளியென்றே உரைத்து நமை
ஏய்த்தாளே பாட்டியென்று—முருகன்
ஏமாந்து பறந்துவிட்டான்.

ஃ ஃ

ஏமாற்றமில்லாமல் திரும்பலாம் பரிசு பெற்று
பூநாற்றம் கமழ்கின்ற பறம்பு மலைப் பாரி கண்டால்
—எனப்
பாரேற்றும் பெயர்பூண்டான்—தமிழுக்குச்
சீரேற்றும் கபிலனது உறவுங் கொண்டான்;
புவிவேந்தன் பாரிக்குத் தமிழ்க்
கவிவேந்தன் கபிலன் தான் உயிர்த் தோழன்;
மதியிரண்டாய்ப் பிரிந்து வந்து
மகளிர் எனப் பிறந்தது போல் —பாரி வள்ளல்
அதியழகுச் சிலையிரண்டைப் பெண்களாகப்
பெற்றெடுத்தான்;
பதியாவோம் அவர்க்கென்றுப் பெண்கேட்டு
பலமன்னர், கிடைக்காமல்
படை கொண்டு பறம்புமலை தாக்கித் தோற்ருர்—தேன்
அடை உடைந்து கிளம்பிவிட்ட ஈக்களன்ன
மூவேந்தர், பறம்புமலைத்
தடை தகர்த்துப் பாரி உயிர் குடித்துவிட்டார்
நாடி வந்து கேட்டபோது பெண் இல்லை யென்று
போர் நடத்தி, பின்னர்!
தேடி நொந்து திசை நாலும் மன்னர்களைக் கேட்டலுத்து
இறுதியிலே,
காரிமன்னன் செல்வர்க்கு
பாரிமக்கள் துணைவியானுர்
கபிலரது முயற்சியினுல்!
நாடாண்டதன் தோழன்—தமிழ்
நாயகனும் பாரிக்குத் தான் செய்யும்
தனிக் கடமை முற்றிற்றென்று
ஏடாண்ட பெருங்கவிஞன் கபில மேலோன்
'எந்தன் பாரியுடன் இனிசேரத் தடையில்லை'
எனக்கருதி வடக்கிருந்து உயிர்நீத்தான்.
சாகின்ருன் நண்பன் எனில் அவன் தலையில்
அவசரமாய்க் கல் ஒன்றைப் போடுகின்ற
ஆருயிர்த் தோழருண்டு இந்நாளில்!
—எதிரியிடம்
தோற்றிடுவான் தோழன் எனில் துரோகம்
செய்து
எட்டப்பர் ஆகின்ற 'நல்லோர்' உண்டு
நம்நாட்டில்—அந்த
நன்றிகெட்டோர்க்கும் நல்லறிவு புகட்டுகின்ற
பாடமன்ருே
கபிலர்—பாரிகனிந்த நட்பு!
உண்டிக்கொடை, பொற்கொடை, ஊர்திக்கொடை எனக்
ஒன்பான் கொடை வழங்கும் தமிழ் மரபில்
முன்னூறு
ஊர்க்கொடையைப் பாடுநர்க்கு அளித்த
—பாரிபுகழ்,
உலவு தென்றல் காற்ருக வீசுகின்ற
மாண்பு கண்டேன்;

ஃ ஃ

வள்ளல்களை வாயார வாழ்த்திவிட்டால் போதாது
வாழ்த்துபவர்
உள்ளங்களும் வண்மையுடன் திகழ்தல் வேண்டும்;
குவித்துவைத்த பொற்குவியல் இருந்தால்தான்
—கரம்
குவித்துவரும் எளியோர்க்கு வழங்கிடலாம்,
—எனக்கூறல் சாக்குப் போக்கு,
அவித்துவைத்த கிழங்கிரண்டில்—பசியால்
தவித்துழலும் ஏழைக்கு ஒன்றீதல்
பெருங்கொடையாம்;
மனிதர்,
இரந்துண்ணல் தகாதென்று
இங்கிருக்கும் தமிழரசு,
இறந்திடுக பிச்சைக்காரர்! செய்தொழில்
கற்றுத் தேர்ந்திடுக! என—
விடுதிபல
திறந்திடவே திட்டமிட்டுப்பணி புரிதல்
ஊக்கு விக்க உமது மனம் அன்பால்
சுரந்திடவே வேண்டுகின்றேன்.
முல்லைக்குத்தேர் ஈந்து பாரியானுன்—
ஒரு ஏழைப்
பிள்ளைக்கு மோர் ஈந்து அவனில் நீர்
பாதியாவீர்!

ஃ ஃ

பாரி விழா சிறப்பதற்குப் பாவலர் தம்
கவியரங்கில்,
வாரியே வழங்கிடுவர் வண்ணத்தமிழ்ப்
பெருமையெல்லாம்—

ஃ ஃ

அன்னைத் தமிழின்,
தொன்மை, எளிமை, வண்மை, வலிமை,
இறைமை, புதுமை—என
எத்தனையோ 'மை'களையே பாடிடலாம்;
இத்தரையை முத்தமிட்டார் தேர்தலிலே
பலபேர்!
அவரெல்லாம்—பாடுகின்ருர்,
மை—மை—என்றே!
ரஷ்ய மை—ரசாயன மை—
மக்கள் தீர்ப்பை மதியா 'மை' யாலே
வெற்றி
உண்மையை மறுப்பவர்க்கு—
இம்மையிலும்—மறுமையிலும்—
என்றுமே தோல்விதான்
இம் 'மை' யிலும், மறு 'மை' யிலும்
என்றுமே தோல்விதான்!—

ஃ ஃ

முடிவுரை:
முன்னுரையில் நான் சொன்ன
கருத்தெல்லாம்—மீண்டும்
முடிவுரையில் சொன்னதாய்க் கொண்டிடுக!
தமிழின் 'தொன்மை' தனைத்
தரணிக்கு உணர்த்திடுவோம்—
'எளிமை' தனைப் பயன்படுத்தி
எல்லார்க்கும் தமிழ் அறிவு
ஊட்டிடுவோம்—
வரைமுறையற்ற 'வண்மை'யினுல்
தமிழ் வளம் வீழாது, காத்திடுவோம்;
'இன்பத் தமிழ் எங்கள் பகைவர்க்கு
'வேல்' என்று முழக்கிடுவோம்...
'வலிமை' காட்டிடுவோம்!
'இறைமை' தனைத் தமிழின்பால் காண்பதிலும்
ஏழைத்தமிழர் சிரிப்பினிலே
காண்பதுவே சிறப்பென்போம்—
பயிற்று மொழித் தமிழாகப்
பரவிவிட்டால்;
பால் நிலவுப் பயணத்தைத்
தமிழ் மொழியில் கற்றுநாமும்
[illegible]களைச் செய்திடுவோம்!
வணக்கம்.

## 14-6-71 ல் தமிழரசுப் பொதுக்குழு கூடுகிறது!

இன்று (1-6-71) நடைபெறவிருந்த தமிழரசுப் பொதுச்சபைக்கூட்டம் சில முக்கிய காரணங்களையொட்டி 14-6-71க்கு பின் போடப்பட்டிருக்கிறது என்று தமிழரசுப்பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பதாலும், அவசரகாலச்சட்டவிதிகளின் கீழ் பகிரங்கக்கூட்டங்கள் நடத்த முடியாமையாலும், யூன் 5,6,7ம் நாட்களில் கிளிநொச்சியில் நடைபெறவிருந்த கட்சியின் 12வது மாநில மாநாடு பின் பொடப்பட்டுள்ளதாகவும் பொதுச் செயலாளர் தெரிவிக்கிருர்;

—

## தமிழ்மாணவர்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

லும் ஒரு நூலும் வெளியிடப்படவில்லை. மருத்துவவியலில் சிங்களத்தில் வெளியிடப்பட்ட ஐந்து மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் வெளியிடப்படவில்லை. கணிதத்தில் இரண்டு நூல்களும், இரசாயனத்தில் ஒரு நூலும், உயிரியலில் இரண்டு நூல்களும், புவியியலில் ஆறு நூல்களும், பொருளாதாரத்தில் ஆறு நூல்களும், வரலாற்றில் நாலு நூல்களும், சட்டத்தில் ஒன்பது நூல்களும் இன்னும் தமிழில் வெளியிடப்படவில்லை;

இந்நூல்களில் ஆறு நூல்களை தமிழில் வெளியிடுவதில்லையெனவும், ஏனைய நூல்களையும் தமிழில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், நூல்களை வெளியிட ஒரு வருடம் தொடக்கம் இரண்டு வருடங்கள் செல்லலாமெனவும் கூறப்பட்டது.

பல்கலைக் கழகத்தில் சேர்வதற்கு மட்டுமன்றி சேர்ந்து படிக்கும் பொழுதும் தமிழ் மாணவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை உரிய காலத்தில் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை;

—

## ஜுனில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்பார்க்கப்படுகிறது;

டெல்லி, குஜராத், மைசூர் பல்கலைக் கழகங்கள், பூனுவிலுள்ள தெக்காணக் கல்லூரி போன்ற முக்கியமான நிறுவனங்கள் மாநாட்டிற்குப் பேராளர்களை அனுப்புகின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், மே. ஜர்மனி, ஹாலந்து, டென்மார்க், இலங்கை முதலிய நாடுகளிலிருந்து மாநாட்டில் கலந்து கொள்ளப் பேராளர்கள் பதிவு செய்திருக்கிருர்கள்;

எட்டு அரங்குகளில் 120க்கும் மேற்பட்ட கட்டுரைகள் விவாதிக்கப்படும் சுமார் முன்னூற்றைம்பது பேராளர்கள் மாநாட்டில் பங்கு கொள்வர்.

—

## அனுபவத்தால் உறுதி

என்னுடைய சொந்த வாழ்வில் நான் மீண்டும் மீண்டும் பரீட்சித்துப் பார்த்திராத எதையும் கடைப்பிடிக்கும்படி என் மக்களை நான் கேட்பதில்லை. இதில் தான் எனது வலிமை அடங்கியிருக்கிறது;

—காந்தியடிகள்;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வங்க விடுதலைப்போர் வளர்ந்த வரலாறு (3)

# வங்கமொழியின் 'உரிமையை மறுத்த அன்றே நாட்டுப் பிரிவினைக்கு விதையூன்றப்பட்டது!

அப்போதுதான் நாடு சுதந்திரம் பெற்றிருந்தது:

எங்கும் வெற்றிக் களிப்பு! மகிழ்ச்சிப் பெருவெள்ளம்! உணர்ச்சிப்பெருக்கு!

ஆனால் நாட்டின் ஒரு பகுதியில் காணப்பட்ட உற்சாகம் இன்னொரு பகுதியில் இல்லை!

உற்சாகத்தின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்திருந்தோருக்கு அப்படி உற்சாகம் பெறக் காரணம் உண்டு—காரணம்: அவர்கள் மொழி ஆட்சி மொழியாக மகுடம் சூட்டப்படுகிறது!

இன்னொரு பகுதியிலே சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியை அனுபவிக்க முடியவில்லை; காரணம்; அவர்கள் மொழி உதாசீனம் செய்யப்படும்! சோக அத்தியாயம் ஆரம்பமாக இருக்கிறது!

தேசத்தின் 'பிதா'—நாட்டின் 'முடிசூடா மன்னர்'—அந்த சமுதாயத்தின் 'ஜோதி'—நாடு உதயமான மறு ஆண்டு—விஜயம் செய்கிறார்!

கட்டுக்கடங்காத உற்சாகம் கரைபுரண்டு ஓடும்! பாராட்டுகள் குவியும்! வரவேற்புகளுக்கு அளவே இருக்காது!—இப்படித்தான் எதிர்பார்க்கப்பட்டது!

ஆனால்...

அவர் சந்தித்தது ஆர்ப்பாட்டம்—எதிர்ப்பு — மக்களது மனக் கசப்பு!

அப்படி ஒரு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்ட பலரில் இன்று ஒருவர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார்!

காலம் மாறுகிறது!

அன்று ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக அவரைக் கைது செய்த போலீசார் இன்று அவர் காலால் இடும் உத்தரவைத் தலையால் செய்யக் காத்திருக்கின்றனர்!

அன்று அவர் 'தேசப்பிதா'வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்! இன்று அவரே 'தேசப்பிதா'வாகக் கருதப்படுகிறார்! ஆனால்) 'தேசம்' என்பதற்குத்தான் பொருள் மாறிவிட்டது.)

ஆம்; அன்று கைது செய்யப்பட்டவர்தான் முஜிபுர் ரகுமான்! அவர் ஆர்ப்பாட்டம் நடத்தியது தேசப்பிதா ஜின்னாவுக்கு எதிராக! காரணம்; அப்போதுதான் ஜின்னா உருதுமொழியை பாகிஸ்தானின் ஆட்சி மொழியாகப் பிரகடனம் செய்திருந்தார்!

அன்று தொண்டனாக இருந்து உருது மொழிக்கெதிராகக் கொடி தூக்கி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்தான் இன்று வங்க தேசத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக—சரித்திரப் புகழ்பெற்ற விடுதலைப் போரின் கதாநாயகனாக விளங்குகிறார்!

இன்று நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கான அஸ்திவாரம் பாகிஸ்தான் உதயமான 1947-ம் ஆண்டே அமைக்கப்பட்டு விட்டது என்பதைத்தான் இந்தச் சம்பவம் சுட்டிக் காட்டுகிறது!

பாகிஸ்தானை உருவாக்கியவர்கள் வங்காளிகளின் மொழி உணர்வை மதிக்கத் தவறிவிட்டார்கள்! அந்தப் பயங்கர குற்றத்திற்கான தண்டனையைத்தான் பாகிஸ்தான் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது:

மனித சமுதாய வரலாற்றிலேயே எந்த உணர்ச்சி, தாய் என்றும், தந்தை என்றும். உடன் பிறப்பு என்றும் பார்க்காது; அவற்றையெல்லாம் இரண்டாவது ஆக்கி முதன்மை பெறுகிறது என்றால் அது தான் விடுதலை உணர்ச்சி!

அந்த விடுதலை உணர்ச்சிக் கனலை மூட்டிவிடும் மூலப் பொருளாக இருப்பது அநேகமாக மொழி உணர்ச்சிதான்!

இந்தத் துணைக்கண்ட பூபாகத்திலேயே மொழியை விழியாகக் கருதித் தாயினும் மேலாகப் போற்றுகிறவன் தமிழனும் வங்காளியும்தான்!

தமிழனுக்கு முதலிடம் கொடுத்து எழுதும்போது கை கூசுகிறது: ஆம்; தமிழரிடையே 'தமிழ் ஒழிக!'—என்று வாய் கூசாமல் கூறும் துரோக சமுதாயப் பிரிவு ஒன்று இருக்கிறது! ஆனால் வங்காளிகளுள் அத்தகைய துரோகப் பதர் ஒன்றுமே கிடையாது என்பதும் அது

## மொழியே விடுதலை உணர்வின் மூலப்பொருள்

மத உணர்ச்சியையும் கடந்து நிற்கிறது என்பதும் அவர்களுக்கே உரிய தனிப் பெருமை! தாய்மொழிப் பற்றுகொண்ட தன்மானத் தமிழனின் தொகை இன்னும் அதிகமாக இருக்கிற காரணத்தால்தான் இந்தியாவிலேயே இந்திமொழி எதிர்ப்பு தென்கோடியில் இன்னும் குன்றாமல் குறையாமல் இருக்கிறது!

மதத்தின் அடிப்படையில் தனிநாடு பெற்ற மறுகணமே அந்தப் புதிய சுதந்திரத்தில் தங்கள் தாய்மொழிச் சுதந்திரம் பறிபோகும் என்று தெரிந்ததும் அதைத் துணிந்து ஒருமுகமாக எதிர்க்க முனைந்தவர்கள் கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த மக்கள்!

பாகிஸ்தான் தந்தை என்று போற்றிப் புகழப்படும் ஜின்னா செய்த முதல் தவறு பாகிஸ்தானின் ஆட்சிமொழி உருதுமொழி—என்று அதற்கு மகுடம் சூட்டியதுதான்!

வங்கமொழியைத் தாய்மொழியாகக்கொண்ட கிழக்கு பாகிஸ்தான் மக்கள் இந்தக் குற்றத்தை மன்னிக்கத் தயாராகவே இல்லை!

பாகிஸ்தான் வேண்டுமா, வேண்டாமா— என்கிற வாக்கெடுப்பு நடந்தபோது 1946-ல் பாகிஸ்தானுக்கு ஆதரவாக முஸ்லிம் லீக் இயக்கத்திற்கு மற்றவர்கள் பிரமிக்கத்தக்க அளவு பெருவாரியாக வாக்களித்து, ஜின்னாவின் கரத்தை வலுப்படுத்தி, பாகிஸ்தான் கரத்தை வலுப்படுத்தி, பாகிஸ்தான் பிரிவினையை உறுதிப்படுத்தியவர்கள் கிழக்கு வங்காளத்து மக்கள்!

அதே கிழக்கு வங்க மக்கள் பாகிஸ்தான் உதயமானதும் உருது மொழிதான் ஒரே ஆட்சிமொழியாகும்—என்று தெரிந்ததும், சுதந்தரம் பெற்ற உற்சாகத்திலே மயங்கிக் கிடக்கவில்லை; மாறாகத் துள்ளிக் குதித்துப் போர்ப் பரணி பாடினர்!

ஆனால் ஜின்னா இப்படிச் செய்வார் என்று அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

'தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்!'—இது தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகெங்கிலும் தாய்மொழியின்பால் பற்றுள்ளவர்கள் பாடும் பள்ளு!

'மொழியைப் பழிப்பவர் எம் தலைவராக இருந்தாலும் விடோம்'—இது கிழக்கு வங்க மக்கள் முழங்கிய முழக்கம்!

இல்லாவிட்டால் எந்தப் பாகிஸ்தான் வேண்டுமென்

'முரசொலி'

**மாறன் எம். ஏ. எம், பி.**

றும்; எந்த ஜின்னாவின் தலைமை வேண்டுமென்றும் 1946-ல் வாக்களித்தார்களோ அதோ ஜின்னாவிற்கு எதிராக 1948-ல் கிழக்கு வங்க மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவரார்களா? அத்தகைய ஆர்ப்பாட்டம் ஒன்றிலே தான் முன்கூறியவாறு ரகுமான் கைது செய்யப்பட்டார்!

மத உணர்ச்சியையும் மீறி; தலைவர் தொண்டர் என்கிற கட்டுப்பாட்டு உணர்ச்சியையும் மீறி மொழி உணர்ச்சி கொடிகட்டிப் பறந்தது!

தங்கள் மொழி உணர்ச்சியை ஜின்னா மதிக்காமல் போனதை கிழக்கு வங்க மக்கள் மன்னிக்கவோ, மறக்கவோ தயாராக இல்லை!

ஜின்னா வங்காளிகளை வெறுத்ததாகவே அவர்கள் கருதுகிறார்கள்!

"இல்லாவிட்டால்—ஆட்சிமொழி ஒன்றே ஒன்றாகத்தான் இருக்கமுடியும்; அது உருது மொழியாகத்தான் இருக்கமுடியும்; வேறு எந்தமொழியாகவும் இருக்க முடியாது—என்கிற வாசகம் ஜின்னாவின் வாயிலிருந்து வந்திருக்காது. ஏன் உருதுமொழி மீது இத்தகைய பாரபட்சத்தையும் வங்க மொழியின் மீது வெறுப்பையும் காட்ட வேண்டும்?"

—இவ்வாறு ரகுமானின் அவாமிலீக் கட்சிப் பத்திரிகையான 'மக்கள்' (People) எழுதியிருக்கிறது:

கிழக்கு வங்க மக்களுக்குப் பாகிஸ்தானத்து மத்திய அரசின் மீதான வெறுப்பு பாகிஸ்தான் உதயமான சில மாதங்களிலேயே உதயமாயிற்று!

மத்திய அரசு உருது மொழிதான் நாட்டின் ஆட்சிமொழி என்று முடிவு செய்தது!

அரசியல் நிர்ணய சபையிலே அங்கம் வகித்த வங்காளிகள் தூங்கிக் கொண்டிருக்கவில்லை! அவர்கள் மொழி உணர்ச்சி தனிநாடு பெற்ற மயக்கத்திலே மயங்கிக் கிடக்கவில்லை! அவர்கள் அத்தனை பேரும் ஒருமுகமாக எதிர்த்தார்கள்!

உருது மொழியோடு வங்க மொழிக்கும் தேசியமொழி என்கிற அந்தஸ்தை வழங்குங்கள்; ஏனெனில் பாகிஸ்தானத்து மக்களில் பெரும் பகு[illegible] மொழிதான்! —என்று அவர்கள் வாதிட்டனர்!

இந்த நியாயமான கோரிக்கையை பாகிஸ்தானின் முதல் பிரதம மந்திரியான லியாகத் அலிகான் புறக்கணித்ததோடு மட்டுமல்ல; எள்ளி நகையாடினார்; கேலி செய்தார்!

"பாகிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடு: அதில் முஸ்லிம்களின் மொழியான உருது மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கமுடியும்—இருக்க வேண்டும்; ஒரு நாட்டிற்கு ஒரு மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அந்த ஒரு மொழி உருது மொழியாகத்தான் இருக்க முடியுமே தவிர, வேறு மொழிக்கு இடம் கிடையவே கிடையாது!"

—இவ்வாறு லியாகத் அலிகான் கூறினார்!

கிழக்கு வங்கத்தின் மீது பாகிஸ்தான் இப்போது வெடிகுண்டு வீசுவதாக அண்மைக் காலமாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன! ஆனால், உண்மையான வெடிகுண்டு எப்போது வீசப்பட்டது தெரியுமா?

என்று வங்க மொழிக்கு எதிராக அரசியல் நிர்ணய சபையில் பாகிஸ்தானின் முதல் பிரதமர் லியாகத் அலிகான் மேற்கண்டவாறு கூறினாரோ அன்றே கிழக்கு வங்கத்தின் மீது முதல் வெடிகுண்டு வீசப்பட்டது; அன்றே இருபத்திநான்கு ஆண்டுகள் கழித்து இன்று ராட்சசத் தருவாக வளர்ந்து நிற்கும் 'பங்களாதேஷ்' என்று கூறப்படும் வங்க நாட்டிற்கான விதையும் ஊன்றப்பட்டது!

---

## ஜூனில் திராவிடமொழி மாநாடு

திருவனந்தபுரத்தில் 1971 ஜூன் 3, 4 தேதிகளில் கூடும் முதல் அனைத்திந்தியத் திராவிட மொழியியலாளர் மாநாட்டிற்குத், தேசியக் கலைத் துறைப் பேராசிரியரும், சாகித்திய அகாடமியின் தலைவரும், இந்திய மொழியியலறிஞர்களின் மூத்தவருமான டாக்டர் சுநீத குமார் சட்டர்ஜி தலைமை தாங்குவார்.

4—6—1971 இல் நடைபெறும் மாநாட்டின் நிறைவு விழாக்களில் கலந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பை மத்தியக் கல்வி அமைச்சர் மாண்புமிகு சித்தார்த்த சங்கர்ராய் ஏற்றுக் கொண்டிருக்கிறார்; மக்கள் சபை நிகழ்ச்சி நிரலைப் பொறுத்து அவர் தம் வருகையை உறுதி செய்வார்; பக்கத்து மாநிலங்களிலுள்ள கல்வி அமைச்சர்களும், இந்தியாவிலுள்ள எல்லா மூத்த மொழியியலாளர்களும் மாநாட்டில் கலந்து கொள்ளுவார்கள்

(11ம் பக்கம் பார்க்க)

---

## ஆபீசில் இடி விழ!

பிட்டுக்கு வீட்டில் மாவு பிசைகிறான்
கட்டிய கணவன்...காரிகை இவளோ
அலுவலகத்தே ஆடும் கூத்தினை
சொலும் யான் புலவன்...சொல்லுதல் வேண்மோ!
தாலை மடித்தொரு விமானம் சமைத்தே
மூலை இருந்தோர் ஆடவன் இவள் மிசை
வீசி அடிக்கவும் வேறோர் இளைஞன்
மேசையில் சாய்ந்தே கதை மிக வளர்க்கவும்
நாவினால் ஒருவன் தன் இதழ் நனைத்து
'வா! வா!' எனத்தலை யால் வரவேற்கவும்
ஒருகண் மூடி ஒருவன் இவளிடம்
பருவ அழகிலே பங்கு கேட்கவும்
காளை ஒருவன் பெண்ணாள் கட்டிய
சேலையை இழுத்தே சேட்டை செய்யவும்
இத்தனை கொடுமையும் இன்பமாய் எண்ணி
முத்தென நகைத்தும் மூங்கிலாய் வளைந்தும்
பத்தினி யாள் படும் பாடுமோர் பாடே!
ஆழக் கழுத்துச் சட்டை அதன் மிசை
சேலை சரியவும் சிகரம் தெரிதலால்
தாங்கா மயக்கம் தலைப்படத் தாவி
ஆங்கோர் இளைஞன் அணங்கினை நெருங்கி
கழுத்து மாலை கைகொளப் பற்றி
'எந்தக் கடைதனில் இதைவாங் கினாயோ
சுந்தரி?' என்று சும்மா கேட்கும்
பான்மையிற் கேட்டுப் பையவே கையை
மான்மகள் மார்பிலும் மகிழ்வுறத் தேய்க்கும்
போதிலே மேனி பொன்னெனச் சிவந்தும்
ஆவி சிலிர்த்தும் அழகுறக் குழைந்தும்
பாவி இவள்படும் பாடுமோர் பாடே!
நங்காய் ஒன்றுயான் நவிலுவன் கேளாய்...
அலுவலகமாம் அலுவலகத்தில்
'அலுவல்' எதுவென அறிந்தவன் எழுதும்
கவிதை இதடி...பாவம் உன் கணவன்
புவியில் உனைத்தமிழ்ப் பூவை என்றே
கருதினான்...பாவம் தாலியும் கட்டினான்!
நீயோ கணவனை நினைக்கவும் மறந்தாய்...
நாயோ என நீ நடந்தனை பெண்ணே!
அடி! உன் அலுவலகத்தில் ஒருநாள்
இடிவிழும் உண்மை! இருந்து பாரடி

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்காத

# புதிய அரசியலமைப்பு

# நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தும்!”

காங்கேசந்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுடைய பெயரில் உள்ள அடிப்படைத் தீர்மானம் ஐந்துக்கான பன்னிரண்டாவது திருத்தத்தை நான் முன்மொழிகிறேன். அதாவது—

“அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் குறித்த நிரலில் பின்வருவன சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்:

(அ) “ஒவ்வொரு பிள்ளையும்” கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல் வேண்டும் என்பதோடு. அதனது தாய்மொழி மூலம் கல்வி பெறும் உரிமை உடையதாயிருத்தல்வேண்டும். கட்டணம் எதுவும் இல்லாமல் அத்தகைய கல்விக்கு திறமையின் அடிப்படையில் சமசந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டியது அரசின் கடமையாதல் வேண்டும். தாய்மொழி மூலமான பரீட்சைகளின் அடிப்படையில் அரசின் அல்லது அரசினால் ஆதரவளிக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் அல்லது நிறுவனத்தின் சேவைக்குச் சேர்க்கப்பட ஆள் ஒவ்வொருவரும் உரிமையுடையவராதல் வேண்டும்.”

(ஆ) “ஆள் எவரும் சாதி சம்பந்தமான தகுதியீனங்களுக்கு உட்படுத்தப்படலாகாது எல்லா சாதிப் பாகுபாடுகளும் ஒழிக்கப்படல் வேண்டும்; சாதி சார்பான தகுதியீனங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு குறிப்பிட்ட ஒரு காலத்திற்குச் சலுகைகள் அளிக்கப்படலாம்.”

(இ) (1) “இலங்கையில் பிறந்த ஆட்களெல்லோரும் அவரின் தந்தை இலங்கையில் பிறந்திருந்தால்; அல்லது சட்டமுறையாகவல்லாத பிள்ளையாக இருக்குமிடத்து, அதன் தாய் இலங்கையில் பிறந்திருந்தால்;”

(2) “இலங்கைப் பெற்றோருக்கு இலங்கைக்கு வெளியே பிறந்துள்ள ஆட்கள் எல்லோரும்;

(3) “1948 நவம்பர் 15 முதல் தொடர்ந்து சிறீலங்காவில் வாழ்ந்துள்ள ஆட்கள் இலங்கை பிரஜைகளாக விரும்பினால், இலங்கைப் பிரஜைகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) “வம்சாவளி மூலமான அல்லது பதிவின் மூலமான எல்லாப் பிரஜைகளினதும் அந்தஸ்து எல்லா நோக்கங்களுக்கும் சமமானதாயிருத்தல் வேண்டும்;

(5) எப்பிரஜையினதும் பிரஜாவுரிமை பறிக்கப்படலாகாது.”

என்பதே;

முதலாவதாக எமது திருத்தப் பிரேரணையின் (அ) பகுதி தமிழ் மொழியிலே சிறப்பாக மொழிபெயர்க்கப்படவில்லை. ஆங்கிலத்திலே—

“ (a) Every child shall have the right to education and shall be educated in the medium of his or her mother tongue—

### தமிழைப் பயன் படுத்தும் உரிமை!

தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்று இருக்கின்ற கட்டாயம் தமிழ் மொழிபெயர்ப்பில் தொனிக்கவில்லை. வேறு விதமாக அது கருத்துக் கொள்கிறது. அதுபோல இந்தத் தீர்மானத்திலே எங்களைப் பொறுத்த அளவிலே (இ) பகுதியிலே சிறீலங்கா என்று இருப்பது எல்லாவற்றையும் நாங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. சிறீலங்கா என்பதற்குப் பதிலாக இலங்கையில் என்று இருக்கவேண்டும்.

தமிழைத் தமிழாக நாங்கள் பயன்படுத்தும் உரிமையாகுதல், இந்த அரசியல் அமைப்புச்சபை எங்களுக்குக் கொடுக்கும் என்று நாங்கள் எண்ணுகிறோம். எனவே அடிப்படைத் தீர்மானத்தில் சிறீலங்கா என்று இருப்பதை அதுவரும் இடங்களில் எல்லாம் இலங்கை என்று மாற்றிப் பேசவேண்டியது தமிழ் மொழியைப் பேசுகின்றவன் என்ற முறையிலே எனது கடமையாகின்றது.

இந்தத் திருத்தங்களைப் பிரேரிக்கும்பொழுது எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகின்றது. நாங்கள் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகளாக, இந்த நாட்டிலே உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தத் திருத்தப் பிரேரணைகளைப் பிரேரித்து வருகின்றோம். இதுவரை எங்களுடைய ஒரு திருத்தம் தானும் ஏற்கப்படவில்லை. இனிமேலும் எங்கள் திருத்தம் எதுவும் ஏற்கப்படமாட்டாதென்று முன்வரலாற்றைக்கொண்டு தீர்மானிக்க முடிகின்றது. எனவே இப்படியாக நாங்கள் ஒரு நாடகம் ஆடாமல் எல்லா அடிப்படைத் தீர்மானங்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டு திருத்தங்களையே நிராகரித்து விடுகிறது என்று முடிவுகட்டி விட்டால் காலம் மிகவும் சுருக்கமாக இருக்கும் என்ற கருத்து எனக்குத் தோன்றுகின்றது.

### கொந்தளிப்பு ஏற்பட இடமளிக்காதீர்கள்

இந்த அரசியல் அமைப்புச் சபையிலே நான் முன்னர் கூறியதுபோல ஒரு நாடகம் நடிப்பதைப் போல் நடக்காமல் சிறுபான்மை இனத்தின் அபிலாஷைகளையும் அச்சங்களையும் உணர்ந்து இன்னும் நீங்கள் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகளோடு கலந்து, நாங்களும் இந்த அரசியல் அமைப்புச் சபையை ஏற்கத்தக்கதாகச் செய்ய வேண்டும். எங்கள் பயங்களையும் நீக்க பல திருத்தங்களைச் செய்யவேண்டும். இவ்விதம் இந்த அரசியல் அமைப்புச் சபையை உருவாக்கினால் தான் தமிழ் மக்கள் இந்த நாட்டிலே இந்த அரசியல் அமைப்புச்சபை செய்யும் சட்டத்தை முழு மனதுடன் ஏற்பார்கள் என்று கூற விரும்புகிறேன்.

அதைவிட்டு யாரேனும் சில தமிழர்களை உங்கள் பக்கத்துக்குத் திருப்பிக்கொண்டு, தமிழ் மக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இதற்கு இருக்கின்றது என்று நீங்கள் எண்ணினால், எப்படி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு இந்த நாட்டிலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டதோ அதுபோலத்தான் இந்த அரசியலமைப்புச் சட்டமும் ஒரு நிலைமையை உருவாக்கிவிடும். அவ்வித ஒரு நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் மீண்டும் இதனை வற்புறுத்துகின்றேன்.

எங்களுடைய அச்சத்தின் காரணமாகத்தான் இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கின்றது. நாம் சிறப்பாக வற்புறுத்தும் அடிப்

## அரசியல் நிர்ணய சபையில் பண்டிதர் இரத்தினம் எச்சரிக்கை!

படைத் தீர்மானங்களில், இந்த நாட்டிலே எல்லாப் பிள்ளைகளும் இலவசமாகக் கல்விபெறவேண்டுமென்பது ஒன்றாகும். அந்த உரிமை எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஒரு பிள்ளை தனது தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமை கட்டாயமாக்கப்படல்வேண்டும். இதுதான் மிகவும் பிரதானமானது. ஏன்? எங்கள் அச்சத்திலே பிறந்தது இது;

### கடந்த கால அனுபவங்கள்!

சென்ற அரசாங்க காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கின்றேன். எங்களுடைய அனுபவங்கள், கருத்துக்கள் சென்ற கால நிகழ்ச்சிகளை விட்டுப்பின்னே செல்ல முடியா. சென்றகால நிகழ்ச்சிகள் எங்கள் மனத்திலே சில கருத்துக்களைப் பதித்து வைத்திருக்கின்றன. சென்ற கால நிகழ்ச்சிகள் தாம் எங்களுக்குப் பயத்தை உண்டாக்கியிருக்கின்றன. சென்றகால நிகழ்ச்சிகளால் நாம பாதிக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டுதான் அந்த ஆபத்தை நீக்கத்தான் நாம் இந்தத்



திருத்தத்தைக் கொண்டுவருகின்றோமேயொழிய ஏதோ திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்பதற்காக கொண்டுவரவில்லை.

உணர்ச்சியோடு பேசுகின்றோம். உண்மை உள்ளத்தோடு பேசுகின்றோம். சென்ற அரசாங்கம் என்ன செய்தது? இது சரித்திர நிகழ்ச்சி. சென்ற அரசாங்க காலத்திலே சிறுபான்மைத் தமிழ் மக்கள் சிலர் தங்கள் மக்களுக்கு ஆசிரியர் உத்தியோகம்தேட முயன்றார்கள். அதற்காக ஒரு வழியைக் கடைப்பிடித்தார்கள். அவர்கள் கிளிநொச்சியிலும் புத்தூரிலும் அச்சுவேலியிலும் மூன்று பாடசாலைகளைத் தொடங்கினார்கள். அவை பௌத்த பாடசாலைகள் என்றார்கள்.

அப்பொழுது முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த திருவாளர் ஈரியகொல்லை என்னிடமும் முன்னைநாள் உடுப்பிட்டித்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் இவசிதம்பரம் அவர்களிடமும்—நாம் அப்போது கல்வி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிலே உறுப்பினராக இருந்தோம் - மதத்தின் அடிப்படையிலே ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்காது என்று சொன்னார். ஆனால், அந்த ஆலோசனைக் குழுவைவிட்டு நாம் விலகியவுடன் என்ன நடந்தது? அந்த மூன்று பாடசாலைகளையும் பௌத்த பாடசாலைகள் என்று கூறி எடுக்க முயன்றார்கள். அப்படி எடுக்கச் சட்டம் இடம் கொடாது; அது காலப் போக்குக்கு முன்னே நடந்த நிகழ்ச்சிகளுக்கு முரணானதாக அமையும்; எனவே, வேறொரு முயற்சி நடந்தது; இது பலருக்குத் தெரியாது;

### விண்ணப்பப் படிவங்கள்

கொழும்புப் பட்டினத்தில் இருந்து பிழையான தமிழிலே சில விண்ணப்பப் படிவங்கள் அச்சிடப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன; அதாவது, ‘என்னுடைய பிள்ளையைச் சிங்களம் மூலம் கல்வி கற்பிப்பதற்கு நான் இசைகிறேன்’ என்று அதிற் குறிப்பிடப்பட்டிருந்தது. இதை நீங்கள் கவனிக்க வேண்டும். இப்பொழுது ஆளும் கட்சியினருக்கு இதுதெரியாமல் இருக்கலாம். அதாவது “Medium of Instruction” சிங்களம்;

அங்குள்ள பெற்றோர்களிடம் இந்தப் படிவத்தில் கையெழுத்து வாங்கும் ஓர் இயக்கம் நடைபெற்றது. அப்பொழுது நாம் இதுபற்றி அப்போதைய பிரதமருக்கு எதிர்ப்புத் தெரிவித்தோம். இந்த மூன்று பாடசாலைகளும் சிங்கள பௌத்த பாடசாலைகளாக ஆக்கப்படுமானல், தமிழ் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் ஆரம்ப கல்வி கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் பெரியதொரு சத்தியாக்கிரகமும் போராட்டமும் நடைபெறும் என்று அச்சுறுத்தினோம்; அதன் பயனாக ஈரிய கொல்லை அவர்கள்—அதைச் சூழ்ச்சியென்றுசொல்கிறேன் —அந்தத் திட்டத்தைக் கை நழுவ விட்டார்கள். இந்த அனுபவத்தை வைத்துக் கொண்டுதான் நாங்கள் இன்று பேசுகிறோம்; இது உங்களிற் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

### நாட்டின் சாபக்கேடு!

இந்த நாட்டிலே உத்தியோகம் பார்க்கும் எல்லாருக்கும் சிங்களம் கட்டாயம் வேண்டும் என்று சொன்னபடியால் எல்லா மாணவர்களும் சிங்களத்தைப் படித்தால் உத்தியோகம் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள். சிங்கள மாணவர்களாக இருந்தாலென்ன, தமிழ் மாணவர்களாக இருந்தாலென்ன எல்லாருக்கும் ஒரு அபிலாசைதான். அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கவேண்டும் என்ற ஒரே அபிலாசைதான். இது இந்த நாட்டின் சாபக்கேடு.

எனவே, உத்தியோகம் என்றமோகம் இந்த நாட்டில் அமோகமாக இருக்கிறது. உந்தியோகத்துக்குச் சிங்களம் கட்டாயம் வேண்டும் என்றால் எந்தத் தமிழ் மாணவனும் கட்டாயம் சிங்களம் படிக்க விரும்புவான்தான். இப்படியாக சிங்களத்துக்கு ஒரு தனி மதிப்பைத் தமிழர்களிடையே உண்டாக்கியிருக்கிறீர்கள்.

அப்படி உண்டாக்கி வைத்தபின் பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள்? எங்களுடைய பிள்ளைகள் சிங்களம் படித்தால் சிங்களப் பிள்ளைகளோடு போட்டியிட்டு உத்தியோகம் எடுத்து விடுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இதுவரை அப்படி நடக்கவில்லை. அப்படி ஒரு தப்பான நப்பாசை எங்களுடைய பெற்றோர்களுக்கு உண்டாகியிருக்கிறது. இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிங்களத்தைப் புகுத்தச் சென்ற அரசாங்கம் வழிவகுத்தது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பத்து லட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக வைத்துக் கொண்டு சோசலிசத்தை உருவாக்க முடியாது!"

## அரசியல் நிர்ணய சபையில் தர்மலிங்கம் பா. உ. முழக்கம்

இன்று இந்த நாட்டிலே சுமார் பத்து இலட்சம் மக்கள் நாடற்ற மக்களாக வாழ்கிறார்கள். எத்தனையோ அரசாங்கங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று முயற்சிகள் எடுத்திருப்பதை நாங்கள் அறிவோம். இறுதியாக சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் முதலாவது சரத்திலே, 'இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; ஒரு நாட்டில் பிரஜாவுரிமை அற்றவர்கள் இருக்கக் கூடாது; ஆகையால் இலங்கைப் பிரஜைகளாக ஆக்குகிறவர்களை ஆக்க வேண்டும்; மற்றவர்களை இந்தியப் பிரஜைகளாக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்கள்.

அந்த ஒப்பந்தம் சரியா பிழையா என்று நான் இந்த நேரத்திலே விவாதிக்க வரவில்லை. ஆனால் அந்த ஒப்பந்தத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பெரும் உண்மையைத்தான் இங்கே எடுத்துக் கூறுகிறேன். ஒரு நாட்டிலே நாடற்றவர்களாக மக்கள் இருப்பின் அது அந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒரு போதும் உகந்தது அல்ல என்பதை ஏற்று, அந்த அடிப்படையிலேதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இலங்கை ஏற்கக் கூடியவர்களை ஏற்று அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டும்; இந்தியா ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களை ஏற்று அவர்களுக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரஜாவுரிமைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை.

### சோசலிசம் வர முடியாது

ஒரு நாட்டிலே ஒன்று இரண்டு அல்ல, பத்து இலட்சம் மக்கள் பிரஜாவுரிமை அற்றவர்களாக, நாடற்றவர்களாக வாழின், அந்த நாட்டிலே ஒருபோதும் ஒரு சோஷலிச சமுதாயத்தை உருவாக்க முடியாது. ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் ஒற்றுமையோடு வாழ்ந்தால்தான் அந்த நாடு முன்னேற முடியும் என்பதை எவரும் மறுக்க முடியாது: ஆகையால்தான், இது மிகவும் முக்கியமான பிரச்சினை என்று நான் கூறுகிறேன்.

இந்த நாட்டிலே வாழுகிற மக்கள், முக்கியமாக நாடற்றவர்களில் இலங்கையிலே



இருக்க விரும்புகிறவர்களை—இந்தியாவுக்குப் போகமாட்டாதவர்களை—நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது தான் எங்களுடைய கொள்கை.

### என். எம். அன்று கூறியது

அது புதிய கோரிக்கை அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1948 ஆம் ஆண்டிலே இந்திய பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டம் விவாதிக்கப்பட்ட நேரத்திலே இன்றைய நிதி அமைச்சர் அவர்களும் மற்றும் இடதுசாரி நண்பர்களும் பேசிய பேச்சுக்களைப் பார்த்தால் எந்த விதமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்றை நிதி அமைச்சர் அவர்கள் அன்று பேசிய பேச்சை மன நினைவுகளில் இருந்து நான் இங்கே கூறுகிறேன். அந்த நேரத்திலே அவர் குறிப்பிட்டார் 'இந்த நாட்டிலே வாழும் மக்களிலே அவர்கள் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் இருந்தால், அவர்கள் இந்த நாட்டிலே இருக்கப் போகிறோம் என்று விரும்பினால் அவர்கள் எல்லோருக்கும் பிரசாவுரிமை வழங்க வேண்டும்' என்று. அது ஒரு நியாயமான தீர்ப்பு அந்த அடிப்படையில்தான் இந்த பிரசாவுரிமைப் பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும், தீர்வுகாண வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம்.

### மனித நீதி பிரச்சினை

இந்தப் பிரசாவுரிமைப் பிரச்சினையைத் தீர்க்காமல் பல ஆண்டுகளுக்கு நாம் கை கழுவி விட்டுக்கொண்டு போனால் இந்த நாடு முன்னேற்றத்தைக் காணமுடியாது, இதனுடன் சம்பந்தப்பட்ட பத்து இலட்சம் மக்கள் இந்த நாட்டிலே வாழ்கிறார்கள். எவ்வளவு காலத்திற்கு அவர்கள் இந்த நாட்டிலே உரிமை அற்றவர்களாக வாழப் போகிறார்கள். நீங்கள் அவர்களை அப்படி வாழ விடப் போகின்றீர்கள்? அது எந்தவித தர்மத்துக்கும் ஏற்றது அல்ல. முக்கியமாக இது ஒரு சட்டப் பிரச்சினை அல்ல. இது ஒரு மனிதப் பிரச்சினை என்பதை எவரும் மறக்கக் கூடாது. நாம் இதை மனித நீதிப் பிரச்சினையாகத்தான் அணுகித் தீர்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை எந்த அடிப்படையில் தீர்க்க வேண்டும் என்று மிக விரிவாக எங்களுடைய பிரேரணையில் குறிப்பிட்டு இருக்கிறோம். அதுமட்டுமல்ல. இன்றைக்கு இந்த நாட்டிலே வாழும் பிரசைகளை இருவிதமாகக் கணிக்கின்றீர்கள். பதிவுப் பிரசைகள் என்றும் வம்சாவளிப் பிரசைகள் என்றும் இருவிதமாகக் கணிக்கின்றீர்கள். அப்படி இந்த நாட்டுப் பிரசைகளாக வந்தவர்களைப் பிரித்து வைக்கக் கூடாது. வம்சாவளிப் பிரசைகளுக்கு ஒருவிதமான உரிமை மற்றவர்களுக்கு இன்னொருவிதமான உரிமை என்று இருக்கக்கூடாது என்று நாங்கள் வற்புறுத்துகிறோம்.

### வேறுபாடு வேண்டாம்

இந்த நாட்டில் ஒருவர் பதிவுப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டால் அவர் இந்த நாட்டிலேதான் வாழப்போகின்றார். வேறு நாடு அவருக்கு இருக்க முடியாது. எந்த விதமான காரணத்திற்காகவும் பிரசாவுரிமை பெற்ற ஒருவருடைய பிரசாவுரிமையை நீக்கக் கூடாது என்றும் நாங்கள் வற்புறுத்துகிறோம். ஒருவருடைய பிரசாவுரிமையை அப்படி நீக்கி விட்டால் என்ன செய்வது என்று தெரியாத நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படும். ஒரு பிரசையுடைய பிரசாவுரிமையைப் பறித்து விட்டால் அவர் இந்த நாட்டிலே எந்த விதமாக வாழ முடியும். வேறு எந்த நாடும் அவரை ஏற்கப் போவதில்லை.

## 'சாதி அமைப்பு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்'

'இந்திய அரசியலமைப்பிலே உள்ள சரத்துக்களை மட்டும் கொண்டு வந்தால் போதாது; சாதி வித்தியாசத்தையே இந் நாட்டிலிருந்து முற்றாக அகற்ற வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். சாதி வித்தியாசத்துக்கு எந்த விதமான அனுமதியும் இந்நாட்டில் இருக்கக்கூடாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஆலயங்களுக்குப் போவதற்கும் வேறு ஒரு சில குறிப்பிட்ட விஷயங்கள் சம்பந்தமாகவும்தான் சாதி வித்தியாசம் காட்டக் கூடாது. எங்களைப் பொறுத்தவரையிலே அதுபோதாது இங்கு சாதி வித்தியாசத்துக்கு இடம் இருக்கக் கூடாது. இது தமிழர்கள் பாரம்பரியம்.

பண்டைய தமிழர்கள் சாதிப் பாகுபாட்டை ஒரு போதும் கடைப் பிடித்தார்கள் இல்லை. சாதி வேற்றுமையை அவர்கள் பாராட்டவும் இல்லை; இடைக்காலத்திலே அந்நியர் நாகரிகம் புகுந்ததன் பின்னர்தான் தமிழ் நாட்டிலே சாதி வேற்றுமை தோன்றியது என்பதைச் சரித்திர வரலாற்றிலே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது: ஆகையால் சாதி இந்த நாட்டில் இருக்கக் கூடாது; சாதி வித்தியாசம் காட்டப்படக் கூடாது என்று கேட்கிறோம்.

பல்லாண்டு காலமாக இருந்து வந்த இந்தச் சாதிப் பிரச்சினையைத் திடீரென்று ஒழித்து விட முடியாத காரணத்தால் ஒரு சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு துறைகளிலும் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்; அவ்விதம் சலுகைகளை அளித்து அவர்கள் பட்ட கஷ்டங்களை யெல்லாம் ஒரு வழியாகப் போக்கிய பின் சாதி வித்தியாசத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

—அரசியல் நிர்ணய சபையில் வி. தர்மலிங்கம்

# அஸீசின் சந்தர்ப்பவாதம் அம்பலம்!

## அரசியல் நிர்ணய சபையில் 'தொப்பியை' புரட்டிப் போட்ட கதை!

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் கண்களில்—குறிப்பாக மலைநாட்டுத் தமிழ் மக்களின் கண்களில்—மண்ணைத் தூவும் கபட நாடகம் ஒன்றை அரசியல் நிர்ணயசபையில் ஆடிமுடித்திருக்கிறார் நியமன உறுப்பினர் ஜனாப் அசீஸ் அவர்கள். அஸீஸின் அரசியல் பரத்தைத்தனம் கண்டு — சந்தர்ப்பவாதத்தைப் பார்த்து—நாடே கை கொட்டி நகைக்கிறது இன்று!

மக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்குவது சம்பந்தமான ஐந்தாவது பிரேரணையில் 'பிரஜை'யென்று இருப்பதற்குப் பதிலாக 'ஆள்' என்று இருக்கவேண்டுமென ஆளுங்கட்சியைச் சேர்ந்த அசீஸ் அரசியல் நிர்ணய சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இது 10 இலட்சம் மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான விடயம் என்று வாதித்தார் அஸீஸ்.

ஆனால், அவரது தீர்மானத்தை எதிர்த்து — அவரது சகாக்களான ஆளுங்கட்சியினரும் யூ. என். பி.யினரும் தமிழ் காங்கிரஸ் பா. உ.க்களும் வாக்களித்தனர்.

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானதாக அஸீஸ் கருதிய இத்தீர்மானத்தை அசீசுடன் சேர்ந்து ஆதரித்தவர்கள் தமிழரசுக் கட்சி பா. உ. க்களே.

அரசாங்கக்கட்சியில் இருந்தாலும், மலைநாட்டுத் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட இத் தீர்மானத்தில் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கத் துணிந்ததற்காக அசீசை பாராட்டியும் வைத்தார் சாவகச்சேரி பா.உ. வி.என். நவரத்தினம்.

ஆனால் அசீசின் சாயம் மறுநாளே வெளுத்துவிட்டது: 'பிரஜை'க்குப்பதிலாக 'ஆள்' என்று இருக்கவேண்டுமென்ற தீர்மானத்தை அஸீஸ் அந்தரங்கசுத்தியுடன் கொண்டுவரவில்லை யென்ற உண்மை 24 மணி நேரத்துள் அம்பலமாகியது:

அஸீஸின் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதற்கு மறுநாள், அஸீஸ் கொண்டு வந்தது போன்ற அதே திருத்தம் — 10 இலட்சம் மலைநாட்டு தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானது என்று அசீசால் கருதப்பட்ட திருத்தம்—தமிழரசாரால் சபையில் கொண்டுவரப்பட்டது. 'பிரஜை' என்று இருப்பதற்கு பதிலாக 'ஆள்' என்று இருக்கவேண்டுமென்ற திருத்தத்தை தமிழரசுத் தந்தை கொண்டுவந்தார்.

ஆனால்...!

முதல் நாள் இதே கருத்தை ஆதரித்து திருத்தம் கொண்டுவந்த ஆசீஸ் மறுநாள் தமிழரசாரால் கொண்டுவரப்பட்ட இத்திருத்தத்தை எதிர்த்து ஆளுங்கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்து தமது அசல் சந்தர்ப்பவாதத்தையும் கொள்கையில் உறுதியற்ற நிலையையும் காட்டிக்கொண்டார்.

'தொப்பியை' புரட்டிப் போட்டுக்கொண்டார்!

அஸீஸின் சந்தர்ப்பவாத அரசியலை நாடு அறிய இது ஒரு வாய்ப்பாகிவிட்டது!

நடந்தது இதுதான்!

பிரஜைக்குப் பதில் ஆள் என்று இடம்பெறவேண்டுமென்ற தீர்மானத்தை அரசியல் நிர்ணயசபையில் பிரேரித்து தாம் மலையக மக்களின் பிரச்சினையில் ஏதோ அக்கறையுள்ளவர்போல 'ஷோ' காட்டுவதற்கு அஸீஸ் திட்டமிட்டிருந்தார்: தமது தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும் என்று கடைசி வரை அசீஸ் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

ஆனால் உடுவில் பா. உ. தருமலிங்கத்தின் பிடிவாதத்தால் அசீசின் தீர்மானம் வாக்கெடுப்புக்குவிட வேண்டிய நிலை அரசியல் நிர்ணய சபையில் ஏற்பட்டது.

இதனால் ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு தள்ளப்பட்டார் அசீஸ்!

அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தே தீரவேண்டிய நிர்ப்பந்தம் இதனால் அசீசுக்கு ஏற்பட்டது.

ஆனால் மறுநாள் —அதற்கு கழுவாய் தேடிக்கொள்வது போல தமிழரசாரின் திருத்தத்தை (அதாவது முதல் நாள் தாம் ஆதரித்த கருத்தை) அரசாங்கத்துடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்து தமது 'பாவத்தை' போக்கிக்கொண்டார். ஜனாப் அசீஸ்!

அஸீசின் சந்தர்ப்பவாதம் இதனால் சந்திக்கு வந்துவிட்டது!

### தமிழ் உணர்ச்சி

'எங்கு வாழ்ந்தாலும், நம்முடைய தமிழுணர்ச்சி ஒன்றாக இருக்கவேண்டும். கட்டவிழ்த்து விட்ட நெல்லிக்காய் போல் இல்லாமல் ஒன்றாகக் கட்டப்பட்ட விறகுக்கட்டுப் போல் தமிழர்கள் உணர்ச்சி, தமிழ் உணர்ச்சி, ஒன்றாகி நிற்க வேண்டும்.

—சிலம்புச் செல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பேசுவது வேதம் பேணுவது காமம்' என்ற நிலை வேண்டாம்!

## பதிவுப் பிரசைகளுக்கும் சட்டத்தின் முன் சமவாய்ப்பு இருக்க வேண்டும்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

**அரசின் கடமை!**

ஆகவே, இந்தப் பயத்தை நீக்குவதற்காக கல்வி நூல் கூறுகிற விதிப்படி, உளவியல் கூறுகிறபடி, ஒவ்வொரு பிள்ளைக்கும் அதனதன் தாய் மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்துவதோடு இது இங்கே ஓர் அடிப்படை உரிமையாக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன்;

எங்களது திருத்தப் பிரேரணையில்,

"கல்விக்கு திறமையின் அடிப்படையில் சமசந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டியது அரசின் கடமையாதல் வேண்டும்;"

என்ற பகுதியையும் ஒரு காரணத்தோடுதான் அங்கு புகுத்தியிருக்கிறோம்: அதாவது equal opportunity.

ஒரு மாணவனுக்கு அவனுடைய திறமையின் அடிப்படையிலே கல்வி கற்க வேண்டிய வாய்ப்பைக் கொடுக்கவேண்டும். இந்நிலை இல்லாதிருப்பதற்குக் காரணம் இன்றைய அரசாங்கம் என்று நான் கூறவிரும்புகிறேன்: தரப்படுத்தல் என்ற போர்வையிலே நடந்தவைகளைத்தான் நான் குறிப்பிடுகிறேன். உண்மையில் தரப்படுத்தலே நடைபெறவில்லை. அப்படி நடைபெற்றதாக எனக்குத் தெரியாது, சிலவேளை அமைச்சர்களுக்குத் தெரியுமோ என்னமோ எனக்குத் தெரியாது,

பலபத்திரிகைகளில் இந்தத் தரப்படுத்தலைப் பற்றிக் கடிதங்கள் வந்தன. பல்கலைக் கழகத்திலே மருத்துவத் துறைக்கோ பொறியியல் துறைக்கோ மாணவர்களை எடுத்த பொழுது தரப்படுத்தித்தான் எடுத்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன அதை நாங்களும் நம்பியிருந்தோம்; ஆனால், பாராளுமன்றத்திலே நான் ஒரு கேள்வி கேட்ட பொழுது, அப்பொழுது பதில் கல்வி அமைச்சராக இருந்தவர் புள்ளிகள் தரப்படுத்தப்படவில்லை என்று சொல்லிவிட்டார்; எனவே, என்ன நடந்தது? என்பதைச் சிந்திக்கத் தக்கவர்களுக்குச் சொல்லுகிறேன்.

**பேசுவது வீரம் பேணுவது காமம்**

நீங்கள் பேசுவது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும் இருந்தால் அதை நாங்கள் ஏற்க ஆயத்தமாக இல்லை. இராமாயணத்திலே கதை ஒன்று வருகின்றது; பேசுவது வேதம் இடை பேணுவது காமம் என்று கும்பகர்ணன் இராவணனைப் பழிக்கின்றான், அக்கிராசனர் அவர்களே, நீங்கள் வீரத்தைப் பேசிக்கொண்டு சீதையைக் கொண்டு வந்து காமத்தைப் போற்றுகின்றீர் என்று கும்பகர்ணன் இராவணனுக்குக் கூறுகின்றான். பேசுவது வீரம் இடை பேணுவது காமம் போல பேசுவது சோஷலிசம் செய்வது, சமதர்மம் செய்வது எல்லாம் வகுப்புவாதமாக இருக்கின்ற உங்களுடைய செயல்களை எல்லாம் கண்டிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்:

புள்ளிகள் தரப்படுத்தப்பட்டன என்று சொன்னார்கள். ஆனால் புள்ளிகள் தரப்படுத்தப்படவில்லை: இதை நான் கல்வி அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தபோதும் பேசினேன்; அவர் அதை ஏற்றுக் கொண்டார். எனக்கு மறுமொழி தந்தபோது அப்படியேதான் பதில் கல்வி அமைச்சரும் தந்தார். எனவே தரப்படுத்தல் விடயமாக என்ன நடந்தது. சிங்கள மாணவர்களுக்குக் குறைந்த புள்ளி, தமிழ் மாணவர்களுக்குக் கூடிய புள்ளி,

அதிக வாய்ப்புகள் இல்லாத பின் தங்கிய கிராமப் பள்ளிகளில் படித்த சிங்கள மாணவர்களுக்கு குறைந்த புள்ளியாக இருந்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தம்: ஆனால் இங்கே அப்படிச் செய்யப்படவில்லை. சிங்கள மாணவர்களுக்குக் குறைந்தபுள்ளி தமிழ் மாணவர்களுக்குக் கூடிய புள்ளி என்று ஒவ்வொரு துறைக்கும் விதிக்கப்பட்டது: இதை இந்த அரசாங்கம் செய்தது;

எனவே இனிமேலும் அப்படி நடக்காமல் இந்த நாட்டிலே எல்லா மக்களுக்கும் அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலென்ன, தமிழர்களாக இருந்தாலென்ன அல்லது முஸ்லிம்கள், பறங்கியர்களாக இருந்தாலென்ன எல்லோருக்கும் ஒரே நீதியாக இருக்க வேண்டும். கல்வித் துறையில் வகுப்புவாதத்தைப் புகுத்தக் கூடாதென்று நாங்கள் வற்புறுத்துகிறோம். நீதிக்கும் நியாயத்திற்கும் மதிப்பளிக்க வேண்டியது எந்த ஒரு அரசாங்கத்தினதும் கடமையாகும்: கல்வி எந்த ஒரு பிள்ளைக்கும் அதன் தாய் மொழியிலேயே கொடுக்கப்பட வேண்டும்; கல்வித் திறமைக்கும் தகுதிக்கும் மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் எங்கள் திருத்தத்திலே அழுத்திக் கூறி இருக்கின்றோம்;

அடுத்ததாக (அ) பகுதியிலே;

'தாய்மொழி மூலமான பரீட்சைகளின் அடிப்படையில் அரசின் அல்லது அரசினால் ஆதரவளிக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் அல்லது நிறுவனத்தின் சேவைக்குச் சேர்க்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் உரிமை உடையவராதல் வேண்டும்.'

என்று கேட்டிருக்கிறோம்: தமிழ் மொழி மூலமாகவும் சிங்கள மொழி மூலமாகவும் அதாவது தாய்மொழி மூலம் கற்ற மாணவர்கள் தாய்மொழி மூலமே போட்டிப் பரீட்சைகளில் தோற்றி அரசாங்க அலுவலகங்களில் அரசாங்க சார்பான கூட்டுத்தாபனங்களில் உள்ள வேலைகளுக்கு உட்பட வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும்; போட்டிப் பரீட்சைகள் எல்லாம் தாய்மொழி மூலமாக நடத்தப்படவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துகிறோம். இன்று அப்படிச் சட்டம் இருந்தாலும்கூட சில பதவிகளுக்கு விண்ணப்பங்களை அழைக்கும் போது தொடக்கத்திலேயே சிங்கள அறிவு கட்டாயமாக இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இது நீதியாக இருக்காது. இதைப் பற்றி ஒவ்வொரு அமைச்சரும் எழுதி எழுதி அலுக்கும் நிலைக்கு நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம்;

அடுத்ததாக, எமது திருத்தப் பிரேரணையின் (ஆ) பகுதியிலே;

'ஆள் எவரும் சாதி சம்பந்தமான தகுதியீனங்களுக்கு உட்படுத்தப்படலாகாது. எல்லா சாதிப் பாகுபாடுகளும் ஒழிக்கப்படல் வேண்டும். சாதி சார்பான தகுதியீனங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு குறிப்பிட்ட ஒரு காலத்திற்குச் சலுகைகள் அளிக்கப்படலாம்.'

என்று கேட்டிருக்கிறோம்: இதைப் பற்றி நாங்கள் முன்னரும் விவாதித்து இருக்கிறோம். ஆனால் இந்தத் திருத்தத்தை நாங்கள் விசேடமாகக் கொண்டு வந்ததற்கு ஒரு காரணம் உண்டு.

தமிழினம் ஒரு சிறுபான்மை இனம். தமிழ் இனம் அதனது எதிர்கால நன்மையை நோக்கி, தீண்டாமையை ஒழிக்க வேண்டும். தமிழ் மக்கள் தங்கள் இனத்தின் சாபக்கேட்டை நீக்குவதற்காக இந்த அடிப்படை உரிமையை ஆக்க வேண்டுமென்று கேட்கிறோம்;

மற்றப் பிரேரணைகள் குடியுரிமையைப் பற்றியவை; அதுபற்றி ஒன்றை மட்டும் குறிப்பிடுகின்றேன்;

அதாவது இ (4)

'வம்சாவளி மூலமான, அல்லது பதிவின் மூலமான பிரசைகளின் அந்தஸ்து எல்லா நோக்கங்களுக்கும் சமமானதாக இருத்தல் வேண்டும்.'

தலைவர் அவர்களே, இதுவும் நான் அனுபவத்தில் கண்ட ஓர் உண்மை. இந்த நாட்டிலே வம்சாவளிப் பிரசைகள் பதிவுப்பிரசைகள் என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. நாடற்றவர்கள் பதியப்படின் பதிவுப் பிரசைகளாகின்றனர். இந்த நாட்டிலுள்ள வம்சாவளிப் பிரசைகள் அனுபவிக்கும் எல்லாவற்றையும் அனுபவிக்கும் உரிமை பதிவுப் பிரசைகளுக்கு இருந்தாலும் இப்பொழுது அப்படி நடப்பதில்லை. பொலிசுகூட அப்படிச் செய்வதில்லை;

எனது முன்னைய தொகுதியாகிய கிளிநொச்சியிலே நடந்த சில சம்பவங்களைக் கூறுகின்றேன். மலை நாட்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் அங்கு வந்துவிட்டால் 'கள்ளத்தோணி' என்று அவர்களைப் பிடித்து அடைப்பார்கள். அதில் பலர் பதிவு செய்யப்பட்ட பிரசைகளாக வாக இருப்பார்கள். ஆனால், பதிவு செய்யப்பட்ட பிரசைகள் என்று சொன்னாலும் அவர்களைப் பொலிசார் உடனே விடுவதில்லை. எனவே, இந்த வேறுபாடு இருந்துகொண்டிருக்கின்றது வம்சாவளிப் பிரசைகளான எங்களுக்கு அப்படியில்லை; தப்பித்தவறி இலங்கை வாசி ஒருவரைப் பிடித்துவிட்டால், அவர் வம்சாவளிப் பிரசை என்றால் எதுவித சான்றுமில்லாமல் உடனே விட்டுவிடுவார்கள்.

ஆனால் பதிவு செய்யப்பட்ட பிரசைகள் அந்தச் சான்றிதழைக் காட்டினாலும் கூட அவர்களை விடமாட்டார்கள். சட்டத்தின் முன்னே சம வாய்ப்பு இருந்தாலும் அந்த வாய்ப்பை அவர்கள் அனுபவிக்கிறார்கள் இல்லை: தொழில், உத்தியோகம் ஆகியவற்றில் அவர்களுக்குச் சமவாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. எனவே, அந்த வாய்ப்புக்கள் இந்தச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளிலே ஒன்றாக வற்புறுத்தப்பட வேண்டுமென்றுதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கின்றோம்;

ஒரு சிறுபான்மை இனம் தனது அனுபவத்தினால் தனக்கு வேண்டுமென்று கேட்கும் சில அடிப்படை உரிமைகளைக் கூறுவதே இந்தத் திருத்தம். இதை நன்கு ஆலோசனை செய்து, ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற மனப்பான்மையை மாற்றி இதனை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டு எனது உரையை முடிக்கின்றேன்.

## கதிரவேலுவின் மறைவு



கொழும்பு மாநகரசபை நீர் நிலைய வேலைப்பகுதி பொறியியலாளராகக் கடமை யாற்றி வந்த திரு. அப்புக்குட்டி கதிரவேலு அண்மையில் இயற்கையெய்தினார்; திரு. கதிரவேலு தமிழ் உணர்ச்சி நிரம்பப் பெற்றவர் என்பதோடு தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளருமாவர்;

நியூசிலாந்து கன்ரபெரி பல்கலைக் கழகத்தில் சிவில் எஞ்சினியர் பட்டம் பெற்ற இவர் லண்டன் சிவில் எஞ்சினியர்கள் நிறுவனத்தின் அசோஸியேட் எஞ்சினியராவார். உள்ளூராட்சிச் சேவையிலும் மத்திய அரசாங்க சேவையிலும் கடமையாற்றியுள்ளார்.

காலஞ் சென்ற திரு. கதிரவேலு பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க அங்கத்தவராகவும், பாடசாலையின் கட்டடக் குழு அங்கத்தவராகவும் இருந்து சமய சமூகத் தொண்டுகள் செய்தார்;

றோயல் கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்த திரு; நல்லையா அவர்களை பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையின் அதிபராக்குவதற்கு ஊக்கம் காட்டிய நால்வருள் இவரும் ஒருவர்: இப்பாடசாலையின் வளர்ச்சியிலும் பெரிதும் இவர் பங்கு கொண்டவராவார்;

தெல்லிப்பழை வீமன் காமம் வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் அப்புக்குட்டி, கந்தப்பிள்ளை செல்லாச்சியின் புதல்வரான இவர் தனது ஆரம்பக் கல்வியை வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையிலும் ஆங்கிலக் கல்வியை நடேஸ்வராக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார்;

திரு: கதிரவேலு, தனது அருமைமனைவியையும் ஆறு பிள்ளைச்செல்வங்களையும் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

## மகாத்மா மணிமொழி!

'ஒரு நாடு முழுவதும் அஹிம்சையை ஏற்றுக் கொண்டாலல்லாது அங்கே சட்டபூர்வமான ஆட்சியோ ஜனநாயகமோ நடப்பது சாத்தியமல்ல என்று நான் நினைப்பதாலேயே, என் சக்தி முழுவதையும் கொண்டு தனி மனிதன் வாழ்விலும் சமூகத்திலும், அரசியலிலும் தனி நாடுகள் விஷயத்திலும், உலக அரங்கிலும் எல்லோரும் அஹிம்சையை வாழ்வின் நியமமாக ஏற்றுக்கொள்ளப் பாடுபட்டு வருகிறேன்.'

நாம் செல்ல வேண்டிய வழியில் கையாள வேண்டிய சாதனங்களின் விஷயத்தில் கவனமாய் இருந்தால் இறுதி விளைவைப்பற்றிய கவலையே வேண்டியதில்லை;

— காந்தியடிகள்;

## தமிழரசுப் பிரமுர் மறைவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய தொண்டர்களுள் ஒருவரும் தெல்லிப்பழையிலுள்ள பன்னாலை வாசியுமாகிய திரு. சின்னப்பு கதிர்காமத்தம்பி அவர்கள் சென்ற திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்;

தெல்லிப்பழை கிராமசபையின் முன்னாள் உப தலைவரும் 6-ம் வட்டார உறுப்பினருமாகிய இவர் ஓர் ஓய்வு பெற்ற பொலீஸ் சார்ஜன்ற் ஆவர். பல்வேறு சங்கங்களுக்கும் தலைவராக விளங்கிய சமூக சேவகரான இவருடைய இறப்பு ஒரு ஈடு செய்யமுடியாத இழப்பாகும், இவருடைய மரணம் பற்றி தந்தை செல்வா அவர்கள் குழந்தை உள்ளம் கொண்ட கதிர்காமத்தம்பி அவர்கள் இறந்த செய்தி பேரதிர்ச்சிக்கு உரியதென்றும் நல்ல ஒரு நண்பரை நாம் இழந்துவிட்டோமென்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் மட்டும் சட்டம் அநியாயமானது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளுக்கு சிங்களம் தாய் மொழியாக வருவதற்கான சந்தர்ப்பங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எத்தனையோ தமிழ்ப்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சிங்களம் படிப்பதற்கு ஒத்துக் கொடுக்கிறார்கள். அப்படி அவர்கள் ஒத்து கொடுத்தபோதிலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குதமிழிலேதான் படிப்பிக்க வேண்டும் என்று நான் சொல்லுகின்றேன்.

### அரசின் கொள்கை

பெற்ரோர் விருப்பத்துக்கு விரோதமாக அரசாங்கம் நடந்து கொள்ளக்கூடாது என்று சிலர் சொல்வார்கள். அது சரியல்ல, நியாயம் அல்ல. இந்த நாட்டில் இருக்கிற எங்களுடைய பெற்றோர் சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் பாடம் படிப்பிக்க வேண்டும் என்று கேட்டால் அவர்கள் விருப்பத்துக்கு இடம் கொடுக்க அரசாங்கம் ஆயத்தமாக இல்லை பெற்றோர்கேட்டபோதிலும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தில் பாடம் படிப்பிக்க அரசாங்கம் முன்வராது. அது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது.

அது போலத்தான் தமிழ்ப் பிள்ளைகளுக்கு பெற்ரோர் விரும்பிய போதிலும் தமிழ் அன்றி வேறு பாஷைகளை போதனு பாஷையாக வைப்பது சரியல்ல. சிங்களப்பிள்ளைகளையும் இதே போல், சிங்களத்தில்தான் படிப்பிக்க வேண்டும். ஆகையால்தான் நாங்கள் இந்தப் பிரேரணையில் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழைப் போதனு மொழியாகப் பாவிக்க வேண்டும் என்றும் சிங்களப் பிள்ளைகளுக்குசிங்களத்தைபோதனு மொழியாகப் பாவிக்க வேண்டும் என்றும் அது கட்டாயம் நடக்க வேண்டும் என்றும் கேட்கிறோம்.

### தமிழினம் ஒழியும்

இந்த மொழி சம்பந்தமாக நான் ஒரு சமாதானத்தையே விரும்புகிறேன். ஏனெனில் இருந்தால் இந்த போதனு மொழி உரிமையை நாங்கள் விட்டுக் கொடுத்தால் எங்களுடைய இனம் இந்த நாட்டிலே இல்லாமல்ஒழிந்து போகும். அதற்காகத்தான் நாங்கள் எங்கள் பிள்ளைகளை சிங்களம் கற்க விடுவதற்குக் கூட ஆயத்தமாக இல்லை.

அரசாங்கத்தில் வேலை பார்க்க வேண்டும் என்றால் சிங்களம் தெரியத்தான் வேண்டும் என்று சொல்லுகிருர்கள். அது ஒரு அநியாயமான சட்டமாக 1956 ஆம் ஆண்டிலே காலஞ்சென்ற பிரதம அமைச்சர் திருவாளர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களால் கொண்டுவரப்பட்டது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

### சிங்களம் தேவையில்லை

ஆனல் இன்றைக்கு இருக்கும் கட்டாயத்தின்படி சிங்களத்தைப் படித்தால்தான் அரசாங்க உத்தியோகம் பார்க்கலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம் அதற்கு நாம் சொல்லுவது என்னவென்றால் பிள்ளைகள் உத்தியோகத்தைப் பெற்ற பிறகு சிங்களத்தைப் படித்து அதில் திறமையைப் பாவிக்கலாம் எட்டரை இலட்சம் தமிழ் மக்கள் வசிக்கும் இந்தத் தேசத்தில் தமிழ் மக்களுக்கு அவர்கள் சீவிக்கும் பகுதிகளிலே சிங்களம் தேவை இல்லை.

ஆகையால் நாம்சொல்வது என்னவென்றால், இன்று நீங்கள் சிங்களத்தை ஒரு பாடமாகப் படிக்கும்படி சொல்கிறீர்கள். பின்னர் சிங்களத்தைப் போதனு மொழியாக்கினல் தமிழர்களுக்கு என்ன வந்துவிடும் என்று கேட்பீர்கள். அவ்விதம் சிங்களம் போதனு மொழியாக வந்தால் தேசம் முழுவதும் சிங்கள மயமாக மாறிவிடும். தமிழ் அழிந்துபோகும் அந்த நிலைமை ஏற்பட நாம் விரும்பவில்லை. இந்நாட்டிலே தமிழ் மக்களாகிய நாம் தமிழர்களாகவே வாழ விரும்புகின்றோம். ஆகவே தான் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களம் போதனு மொழியாவதை நாம் எதிர்க்கின்றோம். வட மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியபகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் சிங்களத்தை அறிந்து கொள்ளத் தேவையில்லை.

### முற்போக்கு இதுவா?

அடுத்ததாக, 'பிரஜா உரிமைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது எத்தனையோ சிங்களப் பிரதிநிதிகள் அதனை எதிர்த்துப் பேசினர்கள். ஆனல், இன்று பிரஜா உரிமை விஷயத்தில் எந்தச் சிங்களப் பிரதிநிதியும் தமிழரின் விருப்பத்துக்குஇசைத்து நடக்க ஆயத்தமாக இல்லை.

ஆகையால் இலங்கை முற்போக்கான தேசமாக எனக்குத் தெரியவில்லை. 1956ஆம் ஆண்டுக்கும் 1971 ஆம் ஆண்டுக்கும் இடையில் 15 வருடங்களுக்கு இந்த விஷயத்தில் நாங்கள் பிற்போக்காகி விட்டோம். இந்த நாட்டிலே நாங்கள் அமைத்துள்ள பிரஜாவுரிமைச் சட்டம் வேறு எந்த நாட்டிலும் இல்லை.

பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி ஒருவன் இந்த நாட்டில் பிறந்திருக்க வேண்டும். அவனுடைய தகப்பன் இந்த நாட்டில் பிறந்திருக்க வேண்டும். இந்த இரண்டு விஷயமும் இருந்தால்தான் அவன் வேலை செய்வதற்குத் தகுதி உள்ளவனுவான். அது மாத்திரமல்ல. இந்தச் சட்டத்தில் இருக்கும் அநீதியான விஷயம் என்னவென்றால், 1948 ஆம் ஆண்டிலே எந்த ஒரு மனிதனும் இந்த நாட்டிலே பிறந்திருக்க வேண்டும். அவனுடைய தகப்பனும் பிறந்திருக்க வேண்டும்.

இப்படித்தமிழரசுத்தந்தை அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அ. நி. சபை 10-6-71க்கு ஒத்திவைக்கப் பட்டது.

# சாதிப்பாகுபாடு முற்ருக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த எங்கள் மதிப்புக்குரிய காலஞ்சென்ற திருவாளர் தருமகுலசிங்கம் அவர்கள் வடபகுதியில் சாதிப் பாகுபாட்டை ஒழிக்க முதன் முதலில் பெரும் முயற்சி எடுத்தார். அவரைத் தொடர்ந்து காலஞ்சென்ற பொன். கந்தையா அவர்களும் இத்துறையில் பெருமுயற்சி எடுத்தார். அவர்களால் இது விடயத்தில் அதிக நன்மையைப் பெற்றுக்கொடுக்க முடியாமற் போய்விட்டது.

தொடர்ந்து இன்று தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களிடையே சாதிப் பாகுபாட்டை அகற்றுவதில் மிகவும் தீவிரமாக முன்னின்று உழைத்து வருகின்றது. இதனுல் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நிலைமை மாறிக் கொண்டு வருகின்றது. செனெட் சபையிலே சிறுபான்மைத் தமிழர் ஒருவரை முதன் முதலில் ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்த பெருமை தமிழ் அரசுக் கட்சிக்கே உரியதாகும்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் செல்வாக்குப் பெற்ற கட்சியாக இருந்த காரணத்தால் அவர்கள் புரட்சி இல்லாமல், இரத்தம் சிந்தாமல், தீண்டாமையை ஒழிப்பதற்கு எவ்வளவோ தூரம் முன் சென்றுர்கள்.

அண்மையிலே—1970 ஆம் ஆண்டிலே—நடைபெற்ற பொதுத் தேர்தலிலே, எங்களுடைய தலைவர் திருவாளர் செல்வநாயகம் அவர்களுடன் காங்கேசன்துறைத் தொகுதியிலே போட்டியிட்டவர்திருவாளர் சி. சுந்தரலிங்கம் அவருடைய போட்டியின் கோஷம் சாதிப் பிரச்சினை. தமிழரசுக் கட்சி சாதியை ஒழித்து, தீண்டாதவர்களையெல்லாம் கோவிலுக்குள் விட்டுவிடும் என்று ஒரு கையிலே சூலமும் ஒரு கையிலே சிலுவையும் கொண்டு தமக்கு வாக்குக் கோரினர். ஆனல் அங்கே தமிழ் மக்கள் அவருடைய கோஷத்தை நிராகரித்து எங்களுடைய தலைவருக்கு அமோகமான வாக்குகளால் வெற்றியீட்டிக் கொடுத்தார்கள். அந்தத் தேர்தலிலே அதே தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவரும் போட்டியிட்டார். அந்தத் தொகுதியிலேயிருந்த சிறுபான்மைத் தமிழர்கள் அவருக்கே வாக்களித்தனர் என்று சொல்வதற்கில்லை.

### இடது சாரிகள் தயங்குவது ஏன்?

தமிழரசுக் கட்சியினர் போட்டியிட்ட ஒவ்வொரு தொகுதியிலும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் பெருவாரியாக இருக்கிருர்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே என்னுடைய வெற்றிக்கு முக்கியமாக சிறுபான்மைத் தமிழர்கள் உதவியாக இருந்தார்கள் என்று கூற ஆசைப் படுகிறேன்.

இதே போல கோப்பாய்த் தொகுதியில் திருவாளர் கதிரவேலுப்பிள்ளை பெற்ற வெற்றிக்கு அவர்கள் உதவியாக இருந்திருக்கிருர்கள். ஆகையால் தமிழ் மக்களிடையே சாதியை ஒழிப்பதற்கு தமிழரசுக் கட்சி முன்னின்று உழைப்பது போல தென்னிலங்கையிலும் சாதியை ஒழிக்க எல்லாக் கட்சிகளும் முன்னின்று உழைக்க வேண்டும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

15-6-71 இதழில் ஆரம்பமாகிறது!

அத்தியாயத்துக்கு அத்தியாயம்
விறுவிறுப்பும் சுவையும் கொண்ட
**புத்தம் புது தொடர் நவீனம்**

**தீக்குள் விரலை வைத்தால்...?**

'யாழ்—ஜனர்த்தனன்' எழுதுகிருர்!

உங்கள் பிரதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

# குறைந்தபட்சக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றிட வேண்டுமெனக் கேட்டனர் நம்மவர்கள்—ஏன் அவர்களது 'அஸிசும்' உட்பட!

முடியாது; மலையகத் தமிழர்களுக்கு ஆக அதை மாற்றமாட்டோம்; மலையகத் தமிழர்கள் உழைக்கத்தான் பிறந்தவர்களே தவிர உரிமையை அனுபவிக்கவல்ல; என்று கூறி விட்டது சிங்கள அரசியல் நிர்ணயசபை!

சாதிபேதத்தை அகற்றிட—சமதர்ம தமிழ் சமுதாயத்தை உருவாக்கிட—இந்திய அரசியலமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் அனைத்தும் நமது அரசியல் திட்டத்திலும் இடம்பெறவேண்டும்; சாதியையே தகர்த்திடவேண்டும்; அடிப்படை உரிமைகளுக்கு முரணுன சட்டங்களை ஒட்டியோ நிர்வாக ஒழுங்கீனங்களைப்பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க உரிமையிருந்திடவேண்டும்; 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் அநீதியானது; அக்கிரமமானது; அதனுல் இந்தியாவின் நிழலையே கண்டறியாத மலையகத் தமிழர்கள் 10 இலட்சம் பேரது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டுவிட்டது; இந்த அநீதியை துடைத்தெறிய 1948 நவம்பர் 15ம் திகதியிலிருந்து—அதாவது கடந்த 22 ஆண்டுகளாக இந்நாட்டில் தொடர்ச்சியாக வாழ்ந்துவருபவர்களுக்கு குடியுரிமை அளித்திடவேண்டும்; என்று எல்லாம் கேட்டனர் நம் தமிழ் தலைவர்கள்.

இக்கோரிக்கைகள் அனைத்தையுமே 'பூ' என ஊதித் தள்ளிவிட்டது சிங்கள அரசியல் நிர்ணயசபை—தனது பெரும்பான்மைபலத்தைக் கொண்டு!

தண்பா, அரசியல் நிர்ணய சபையில் அடுத்து வரவிருக்கும் தமிழ்மொழி பற்றிய திருத்தங்கள், இந்நாட்டுத் தமிழினத்தை பொறுத்தவரையில் உயிருக்குயிரானவை; தமிழர்கள் தமிழர்களாக தனித்துவத்தை பேணி இந்நாட்டில் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதவை.

ஆம் தமிழ் மொழி யுரிமைபற்றிய தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்சக் கோரிக்கைகள் அவை-

தமிழ் பிள்ளைகளின் பயிற்சி மொழியும் உயர்கல்வி பெறும் மொழியும் தமிழ் என்பது அரசியல் சாசனத்தில் திட்டவட்டமாக இடம் பெற வேண்டும்.

தமிழ் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழி தமிழ் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் !

இவ்விருமாகாணங்களின் நீதிமன்ற மொழியாக - பதிவேட்டு மொழியாக தமிழ் இருந்திட வேண்டும்!

இலங்கையின் எப்பாகத்தில் வாழ்ந்திடினும் தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தாய் மொழியிலேயே பதில் பெறும் உரிமை தமிழர்களுக்கு இருக்க வேண்டும்.

அரசாங்க சேவையிலும், கூட்டுத்தாபனங்களிலும் சேருவதற்கு தாய் மொழி மூலமே பரீட்சை எடுக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு இருந்திட வேண்டும்.

மேற்கண்ட ஐந்து கோரிக்கைகளும் தமிழ் மக்களைப்பொறுத்தவரை உயிர் நாடியான கோரிக்கைகள் ஆகும்; இக்கோரிக்கைகளையும் சிங்கள அரசியல் நிர்ணய சபை தூக்கியெறியுமானல் அதன் பொருள், இலங்கையின் ஐக்கியத்தை இலங்கையின் ஒருமைப்பாட்டை அ.நி. சபை உடைத்தெறிகிறது என்பதுதான்!

இக்கோரிக்கைகளும் புறக்கணிக்கப்படுமானல்-அதன்பின் தமிழ் பிரதிநிதிகள் அரசியல்நிர்ணய சபையில் இருப்பதில்எதுவித அர்த்தமுமில்லை! உடனடியாக வெளியேறி அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து,புதிய அரசியலமைப்புக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்திடவேண்டும். இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழரசுப் பொதுச்சபை திட்டவட்டமான-உறுதியான முடிவினை எடுத்திடும் என்று நம்புவோம் !

நமது குறைந்தபட்சக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படுமாயின்-தமிழுக்கு இந்நாட்டில் சமாதிகட்டும் புதிய அரசியலமைப்பினை ஏற்றுக் கொள்ள தமிழினத்தார் தயாராக இல்லையென்பதனை வலிவுடன் எடுத்துக் காட்டிட வேண்டியது நமது தமிழ் பிரதிநிதிகளின் முக்கியமாகத் தமிழரசாரது கடமையாகும்!

அரசாங்கம் தமிழினத்துக்கு கட்டும் சமாதிக்கு கல்தூக்கிக் கொடுத்து வரும் தமிழ்த்துரோகிகளை தமிழ் மக்கள் கவனித்துக் கொள்வார்கள்-தமிழின விடுதலை இயக்கமாம் தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்துவிட்டு தனது இலட்சியப் பாதையில் வேகமுடன் செல்லட்டும்; தமிழன் மானம் காப்பாற்றப்படட்டும் ! !

அன்புடன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


## விரைவில் எதிர்பாருங்கள்



### கெப்பிட்டல் பிளாஸா

ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
அசோகன் முத்துராமன்
நாகேஷ் ஷீலா

நடித்த

ராமண்ணாவின்

டைரக்ஷன்:—ராமண்ணா

# மூன்றெழுத்து

### கெப்பிட்டல் பிளாஸா

எம். ஜி. ஆர். சரோஜாதேவி
ரத்னா—நம்பியார்

—நடித்த—

# எங்க வீட்டுபிள்ளை

புதிய கொப்பி (கலர்)

### கிங்ஸ்லி

எம். ஜி. ஆர். சரோஜாதேவி
எம். ஆர். ராதா

—நடித்த

நீதிக்குப் பின் பாசம்

## 4வது ஜனத்திரள் நிறைந்த மாதமாக காட்சிதருகின்றான்

செட்ன்ரல்
(மருதானை)
ராணி
(யாழ்நகர்)
—ஆகிய திரைகளில்—
நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்



சதன்
நம்பியார்
எஸ். என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த

சிவாஜிகணேசன்
அளிக்கும்
அருண்பிரசாத் மூவிஸ்

# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்
டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)
இசை மெல்லிசை மன்னர்! எம். எஸ். விஸ்வநாதன்
(பாஸ்கள்யாவும் ரத்து)

## 4வது வாரமாக காட்சியளிக்கிறது

எல்பின்ஸ்டன் (மருதானை) — ரொக்ஸி (வெள்ளவத்தை) — றீகல் (நீர்கொழும்பு)

ஜெமினி, விஜயகுமாரி, நாகேஷ், அசோகன், ராஜ்ஶ்ரீ,


—நடித்த—



# மனைவி

## 3வது மாதம் செல்லமகால்

வின்சர் (யாழ்நகர்) — இம்பீரியல் (மட்டுநகர்)



மாஸ்டர் பிரபாகர் திறம்பட நடித்த

# வாரஜாவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தி